★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 கார்த்திகை 22 ஸபர் 21 இதழ் 298

யாழ்ப்பாணம் புதன்கிழமை 8—12—82

## யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் க. கைலாசபதியின் மறைவு குறித்து அஞ்சலி தெரிவிக்கும் பொருட்டு யாழ். பல்கலைக்கழகம் இன்று புதன்கிழமை மூடப்பட்டிருக்கும்.

யாழ். பல்கலைக் கழகத்தில் அன்னாருக்கு அனுதாபம் தெரிவித்து கறுப்புக்கொடி பறக்க விடப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகம் நேற்று இயங்கிய போதிலும் மாணவர்கள் வகுப்புகளுக்கும் செல்லவில்லை.

அதிகமான மாணவர்கள் மற்றும், யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் நேரில் அஞ்சலிசெலுத்தும் பொருட்டு கொழும்பு சென்றுள்ளனர்.

## கார் விபத்து ஒருவர் பலி!

(யாழ்ப்பாணம்)

வயோதிப வியாபாரி ஒருவர் கார் விபத்தில் பலியானார்.

கோண்டாவிலைச் சேர்ந்த நல்லதம்பி கந்தையா வயது 72 என்பவரே பலியானவராவார். நேற்று இந்த விபத்து நிகழ்ந்தது. காங்கேசன்துறை வீதியிலுள்ள தட்டாதெருச் சந்தியில் கடைவைத்திருக்கும் இவர் கடைக்கு வெளியே

[8-ம் பக்கம் பார்க்க]

## ★ "கத்தோலிக்க மதகுருமார் விவகாரம்:

# சந்தேக நபர்களுக்கு எதிராக நீதியான விசாரணை வேண்டும்!"

## கத்தோலிக்க ஆயர்பேரவை குழு கோரிக்கை

### விசேடசலுகை வேண்டாம்என வலியுறுத்து

(கொழும்பு)

"சந்தேகநபர்களுக்கு எதிராக ஒரு நீதியான, நேர்மையான விசாரணை நடைபெற வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகின்றோம். அதற்காக மதகுருமார் விஷயத்தில், எந்த விசேட சலுகையையும் நாங்கள் கேட்கவில்லை."

ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனவை கத்தோலிக்க ஆயர் பேரவைக் குழு நேற்று சந்தித்த பின்னர் குழுவின் தலைவரான இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவர் வண. பிதா பிராங் மார்க்கஸ் பெர்ணண்டோ வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இத்தூதுக்குழுவில், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவர் வண. பிதா பிராங் மார்க்கஸ் பெர்ணண்டோ, கொழும்பு அதிமேற்றிராணியார் வண. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்ணண்டோ, கத்தோலிக்க ஆயர் பேரவைச் செயலாளர் நாயகம் வண. ஒஸ்வால்ட் கோமஸ் ஆகியோர் சென்றிருந்தனர்.

இச்சந்திப்பின்போது, பிரதமர் ஆர். பிரேமதாசா, விளையாட்டுத்துறைஅமைச்சர் திரு. வின்சன்ட் பெரேரா, கடற்

[8-ம் பக்கம் பார்க்க]

## கோண்டாவில் மேற்கில் தம்பதிகள் கோரக்கொலை!

### பெருமளவு நகைகள் கொள்ளை?

[கோண்டாவில்]

நகைகள் அடகு பிடிக்கும் தம்பதிகளை கொடூரமாகக் கொலைசெய்துவிட்டு, இனந் தெரியாத கோஷ்டி ஒன்று பெறுமதிவாய்ந்த நகைகளையும், ரொக்கப்பணத்தையும் கொள்ளை அடித்துச்சென்றுள்ளது!

இந்தப்பயங்கரச்சம்பவம் கோண்டாவில்மேற்கில்நேற்று அதிகாலை நிகழ்ந்துள்ளது.

சின்னப்பு மார்க்கண்டு [வயது 70] அவரது மனைவி நல்லம்மா [வயது 65] ஆகிய இருவருமே கொலை செய்யப்பட்டவர்களாவர். இத்தம்பதிகளுக்குப் பிள்ளைகள் இல்லை.

மார்க்கண்டு என்பவர் கத்தி வெட்டுக்காயங்களுடனும், அவரது மனைவி கழுத்துநெரிக்கப்பட்டும் கொலையுண்டு கிடக்கக்காணப்பட்டனர். இச்சம்பவத்தின்போது கொள்ளையர் வீட்டிலிருந்த மூதாட்டி ஒருவரை அறையில் வைத்து பூட்டியிருந்தனராம். வீட்டின் முன்கதவை உடைத்துச் சென்ற கொள்ளைக்கோஷ்டியினரே, தம்பதிகளைக் கொலை செய்துவிட்டு இக்கொள்ளையை நடத்தியுள்ளனர்

கொள்ளைநடைபெற்ற வீட்டுக்கு அருகிலுள்ள வீட்டுக்காரரான அருளம்பலம் செல்வராசா என்பவர், சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு இச்சம்பவம்தொடர்பாக நேற்றுக்காலை புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி பொன். சுகுணேந்திரன் ஸ்தலத்துக்குச் சென்றுபார்வையிட்டார்.

அலுமாரியும் 'டிரங்குப்'

(8-ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி முனையில் 'வான்' கொள்ளை!

[வவனியா]

முருங்கன் பெரியகடைப் பகுதியில் நின்றவான் ஒன்று துப்பாக்கிமுனையில் 3 இளைஞர்களால் நேற்று முன்தினம் இரவு கொள்ளையடிக்கப்பட்டது.

"ஒருவருக்குச் சுகமில்லை. அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்ல வேண்டும்" என்று கூறி அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வானை 3 இளைஞர்கள் வாடகைக்குப் பிடித்துச் சென்றதாக இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

வழியில் துப்பாக்கி முனையில் சாரதியையும், கிளீனரையும் சீற்றுக்குக் கீழ் கட்டிவைத்துவிட்டு யாழ்ப்பாணம் நோக்கி வானை ஓட்டிச் சென்றதாகவும் வழியில் வானுக்கு 'டீசல்' இல்லாதபோது வவனியாவில் எண்ணை நிரப்பிச் சென்றதாகவும், ஓமந்தையில் சாரதியையும், கிளீனரையும் இறக்கிவிட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

வான் உரிமையாளர் முருங்கன் பொலிசாருக்கு புகார் செய்துள்ளார். [ச]

## "வாசிப்பதையே தொழிலாக கொண்டவர் கைலாசபதி"

-பண்டிதமணி

(யாழ்ப்பாணம்)

"பேராசிரியர் கைலாசபதியை எனக்குமுதன் முதல் அறிமுகம் செய்து வைத்தவர் இரசிகமணிகனகசெந்திநாதன். அப்பொழுது பேராசிரியர் "தினகரன்" ஆசிரியராக இருந்திருப்பார். சிலவருடங்களுக்குமுன் நாவலர் நூல் வெளியீட்டு விழாவில் தாம் இளமை தொடக்கம் நாவலர் பற்றியநூல்களைப்படித்ததாகக் கூறித்தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். நாற்பத்தொன்பது வயசு; நடுப்பருவம்; நம்மைவிட்டு அவர் விரைவாகப் பிரிந்தது நமதுஅவக்குறைவே.

[8-ம் பக்கம் பார்க்க)

## "தமிழறிஞர் வரிசையில் இடைவெளி ஏற்பட்டுள்ளது"

-யு. பி. விஜயக்கோன்

(யாழ்ப்பாணம்)

"பேராசிரியர் கைலாசதியின் மறைவு தமிழ் மக்களுக்குப்பேரிழப்பாகும்" என்று யாழ். மாவட்ட அமைச்சரும், தம்பதெனியா பாராளுமன்ற உறுப்பினருமான திரு யு. பி. விஜயக்கோன், யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் க. கைலாசபதியின் மறைவுகுறித்து விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் கவலைதெரிவித்தார்.

"பேராசிரியர் கைலாசபதி அறிவாலும், பண்பாலும், துணிந்து செயற்படும் வன்மையினாலும் ஒப்பாரின்றி தலைசிறந்து விளங்கிய ஓர் அறிஞர். அவர் யாழ் வளாகத்தலைவ

[8-ம் பக்கம் பார்க்க]

## சிறந்த மனிதநேயபண்பாளர்

-யாழ். அரசஅதிபர்

(யாழ்ப்பாணம்)

"மறைந்த பேராசிரியர் கைலாசபதி சிறந்த மனிதநேயபண்பாளராகத் திகழ்ந்தார்". என்று யாழ். அபிவிருத்திச் சபைச்செயலாளரும், யாழ். மாவட்டஅரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

"பேராசிரியர்க. கைலாசபதியின் திடீர் மறைவை அறிந்து ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைந்தேன். பேராசிரியர் அவர்கள் சிறந்த கல்விமானும் தமிழ் இயல் அறிஞருமாவார். ஒப்பியல் இலக்கிய ஆராய்ச்சியாளரான, அவர் விமர்சனத்துறையில் தனக்கென தனி முத்திரையை நாட்டியவர். நவீன தமிழ் இலக்கியத்தை வளம்படுத்தி ஈழத்து இலக்கியத்திற்குப் பெருமைதேடி தந்தவர். அவரது மறைவு பெரும் இழப்பாகும்" என்றும் யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

## "இலக்கிய வளர்ச்சிக்கு பெரிதும் உழைத்தவர்"

-யாழ். எம். பி.

(யாழ்ப்பாணம்)

"மறைந்த பேராசிரியர் க. கைலாசபதி, தமிழ் இலக்கியத்துறையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர். அவரது மறைவு, யாழ். பல்கலைக்கழகத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்" என்று பேராசிரியர் க. கைலாசபதியின் மறைவுகுறித்து யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் விடுத்திருக்கும் இரங்கல் செய்தியில் கவலை தெரிவித்துள்ளார்.

"அமரர்கைலாசபதி ஈழத்து தமிழ் மக்களுக்கு பெருமை தேடித்தரும் வகையில் அடக்கமாக, தன்பேனாவினாலும், பரந்த கல்விஞானத்தாலும் பணிபுரிந்தார். யாழ்ப்பாண வளாகத்தின் முதல் தலைமைப்

[8-ம் பக்கம் பார்க்க]

# சரி விளம்பரம்

## விற்பனைக்கு

சண்டிலிப்பாய் கதிரியாப் புலம் வளவு 32 பரப்பு உடன் விற்பனைக்கு உண்டு. காணி பார்வையிடுவதற்கு P. இலங்கநாதன், சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய் காணி விலை விபரங்கட்கு: ''செல்வி மில்'', கைதடிச் சந்தி. (5391)

## தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள ஐந்துமடங்கு பெறுமதியான காணிகளுக்கு தவணை அறுதிக்குப் பணம் தேவை. 48 வீதம் வட்டிவழங்கப்படும் பிராஜ்மல் என்ரபிறைசஸ், 93, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 5392

## அறிவித்தல்

'தமிழன் குரல்'

நிர்வாக அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 25-12-82க்கு பிற்போடப் பட்டுள்ளது.

சீட்டிழுப்பு முடிவுகள் 27-12-82 ந் திகதிய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும்

நிர்வாகி

எஸ். பாலசிங்கம்

5401

## விளம்பரம்

அபிவிருத்திச் சபைக் கட்டளைச் சட்டம் 1980-ம் ஆண்டு இலக்கம் 35 பிரிவு 40 (பி)யின் பிரகாரம், வவனியா மாவட்ட அபிவிருத்திச் சபையின் 1983-ம் ஆண்டிற்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டமும், 1983-ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டமும் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக 10-12-82 தொடக்கம் 16-12-82 வரை வவனியா மாவட்ட அபிவிருத்திச் சபை செயலகத்தில் வைக்கப்படும்.

மு. சிற்றம்பலம்,
தலைவர்,
மாவட்ட அபிவிருத்திச் சபை,
வவனியா.

01-12-1982

5385

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

### கட்டிடம் வாடகைக்கு விடல்- யாழ். பல நோ.கூ. சங்கம்

இல: 127, கே. கே. எஸ். வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் முதலாம் மாடியில் 3000 சதுரஅடி பரப்புள்ள இடம் வாடகைக்கு உண்டு இதை முழுமையாகவோ அல்லது 750 சதுர அடி கொண்ட துண்டுகளாகவோ வாடகைக்கு எடுக்க விரும்புவோர் ரூபா 25/- செலுத்தி விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம் விண்ணப்ப முடிவுதிகதி; 30-12-'82

பொதுமுகாமையாளர்

127, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்,
6-12-1982 5403

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம் சோமசுந்தரம் ஒழுங்கை, 1-ம் இலக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற தெல்லிப்பளை ஜெயரட்ணம் இராஜரட்ணம் என்பவரின் மரணசாதனமில்லாத சொத்துக்களின் விடயத்தில்

– மரணமெய்தியவர்

தெல்லிப்பளை ஜெயரட்ணம் இராஜரட்ணம் கைம்பெண் அருள் இராசமலர் இராஜரட்ணம், இல: 1, சோமசுந்தரம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

– மனுதார்

வழ. இல:ரி / 3701

மேலேயுள்ள இலக்கங்கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ம்ஆண்டுமார்கழி மாதம் 17-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்.

1982ம் ஆண்டு ஐப்பசி மாதம் 22-ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி

தா. குலஞானம்,
(ஒப்பம்)
பதிவாளர்.

வரைதல்:

செ. மகேசன்,
(ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி

5366

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம், அரியாலை, சந்தனமாதா கோவில் ஒழுங்கையில் வசித்த சிவப்பிரகாசம் பெண் அம்பிகா தேவி என்பவரின் மரண சாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

பண்டாரம் சிவப்பிரகாசம், தும்பளை, பருத்தித்துறை, மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம்
இல: 3699

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ம் ஆண்டு மார்கழி மாதம் 17-ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்,
பதிவாளர்

1982-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 15-ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

5320

## லெனினும் ஆசியாவும்

தேசிய சுதந்திரம், தேசிய இனங்களின் விமோசனம் சமாதானம், சோஷலிஸம் ஆகிய இலட்சியங்களுக்காகப் போராடும் சகல உழைக்கும் மக்களுக்கும் ஆத்மீக ஆயுதமாக இருப்பது மார்க்ஸீய அறிவாகும்

இவ்வறிவைப் பெற பழம்பெரும் புரட்சிவாதிகளில் ஒருவரான

வழக்கறிஞர் த. துரைசிங்கம் எழுதிய

''லெனினும் ஆசியாவும்''

என்ற நூலைப் படியுங்கள்

இந்நூல் மக்கள் பிரசுராலயம்

40, சிவன்கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம் மற்றும் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

விலை ரூபா 10/-

சோஷலிஸ ஆய்வுக்கழகம்,
31, விகசன் வீதி. கொழும்பு-12

(5125)

## வேலை வாய்ப்புகள்

### 1. சவுதி அரேபியா

(a) 09 – லேபோர்ஸ்
(b) 06 – றில்லேர்ஸ் (Drillers)
(c) 02 – ஹெவி இக்கியுப்மன்ற் மெக்கானிக்குகள் (Heavy Equipment Mechanics)
(d) 07 – போல் கிளைம்பிங் எலக்ரீசியன்ஸ் (Pole Climbing Electricians)
(e) 01 – கிளாக் (Clerk)
(f) 01 – சமையல்காரர் (Cook)

### 2. வடலெபனன் / சிரியா

(a) 04 – ஒட்சிசன் வெல்டர்கள் (Oxygen Welders)
(b) 02 – மெக்கானிக்குகள்
(c) 02 – ஸ்ரீல் கட்டர்கள் (Steel Cutters)
(d) 01 – மெக்கானிக்கல் எஞ்சினியர்
(e) ஹவுஸ் மெயிட்ஸ் (House Maids)

**வயதெல்லை 25 தொடக்கம் 35 வரை**

விண்ணப்பப் படிவங்களை கீழ்க்காணும் யாழ்ப்பாண விலாசத்தில் பெற்று எதிர்வரும் 10-ம, 11-ம் திகதிகளில் நேர்முகப் பரீட்சைக்கு சமூகம் தரவும்.

**N. சிவப்பிரகாசம்,**

54, 3-ம் குறுக்குத் தெரு — யாழ்ப்பாணம்.

தலைமை அலுவலகம்:-

VAUXHALL MILLS CORPORATION,
36/56, Edmonton Road,
Kirillapone
COLMBO – 6

தொழில் அனுமதிப் பத்திரம் இல: 35

தொழில் அங்கிகாரம் இல: J/FE/82 5405

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மாதகல், மாதகல் கிழக்கு, முருகர் கார்த்திகேசு
வழக்காளி

இல. ஈடு/4365 எதிராக

மன்னர் உப்புக்குளம் தற்போது வீரபத்திரர் கோவிலடி, சண்டிருப்பாய், மாரிமுத்து வல்லிபுரம்
எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக் கோர்ட்டில் ஈடு/4365 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1982 ஆம் ஆண்டு டிசம்பர் (மார்கழி) மாதம் 15 ஆம் திகதி (15-12-82) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் முறையே அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 3800/-ம், இதில் ரூபாய் 2500/-க்கு 2-9-81 திகதி தொடக்கம் 20-5-82 திகதி வரைக்கும் 100க்கு 24 வீத வட்டியும், பின்திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 2562-40 சதம்,

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய்க் கோவிற்பற்று சண்டிருப்பாய் இறை ''பீயா பேடுவளவு'' நிலப்பரப்பு ஒன்றரையும் ஒரு மாவும், எல்லை கிழக்கு அம்பலவாணர் பொன்னம்பலத்துன் பிள்ளைகளின் ஆதனம். வடக்கு ஒழுங்கை மேற்கு மாரிமுத்து பொன்னுத்துரையின் ஆதனம். தெற்கு வயித்திலிங்கம் பெண் தேவியின ஆதனம் இதடங்கலும் மேற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் அரைவாசியில் இதற்குரிய பங்கும் வழி வாய்க்காலுரித்தும். E 536/198.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்

தெல்லிப்பழை.
19-10-1982. 5404

## இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 22ம் திகதி
புதன்கிழமை
(8—12—82)

மேடம்; எதிர்பாராத மூலையிலிருந்து ஆபத்து உருவாகும். உள் வீட்டிலேயே சிறிய பூசல்கள்தோன்றக்கூடும். இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிக்க அவதானமாக இருக்க வேண்டும்.

இடபம்; புண்ணிய காரியங்களில் புதிய உற்சாகம் பிறக்கும். ஏழைகளுக்கு இரங்குவதில் முன்நிற்பீர்கள். தெய்வ குரு பக்திக்கும் இடமுண்டு. மற்றவர்கள் உங்களை பின்பற்றக்கூடிய சூழ்நிலை உருவாகும்.

மிதுனம்: பயன்தரும் பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம். வெளியிடத் தொடர்புகள் பெருகும். கருத்து வேற்றுமைகள் மறைந்து நல்ல முடிவு ஏற்படும். கல்வித்துறையிலும் முன்னேற்றம்உண்டு,

கடகம்: புதிய தொழில் மூலம் இலாபம் கிடைக்கும். புத்திரர்களுடைய செல்வாக்கும் பெருகும், புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும் பூமியால் முன்னேற்றமுண்டு.

சிங்கம்: சிந்தனைகளின் தாக்குதல் உங்கள் உடல்நிலையைப் பாதிக்கும். மனதில் அமைதி குன்றும். திடீர் முடிவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். தொழில்துறையில் தொல்லைகளுக்கு இடமுண்டு.

கன்னி: சிந்தையில் குழப்ப நிலை தென்படும். மனைவியின் உடல்நிலை சிறிது கவலையைத் தரலாம். செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும் சிலர் கடன்படவும் நேரிடலாம்.

துலாம்: மனை வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் ஏற்படும். நீண்டநாள் பிணி நீங்குவதற்கு இடமுண்டு, போதுமென்ற மனம் உங்களுக்கும் பெருமையைத்தேடித் தரலாம். பேச்சாளர்கள் சிறப்படைவர்.

விருச்சிகம்: எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும். எதிரிகளின் சூழ்ச்சிகள்பலமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத விதமாக உடல் நலம் பாதிக்கப்படலாம். பொறுமை வேண்டும்.

தனு: சுற்றுடலில் உங்கள் செல்வாக்குவளரும் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள். குடும்பத்தில் பிணைப்புகள் பலப்படையும். சிலருக்கு அதிர்ஷ்டலாபமுண்டு.

(7-ம் பக்கம் பார்க்க)

## விற்பனைக்கு

கொக்குவில்
பொற்பதி வீதி— 1½ பரப்பு

கோப்பாய் தெற்கு
சேர்ச் வீதி—11 பரப்பு

கோண்டாவில் மேற்கு
நவரத்தினசாமி வீதி— 2 பரப்பு

உரும்பிராய் வடக்கு
இந்துக்கல்லூரி வீதி— 5 பரப்பு

நவாலி —4 பரப்பு

யாழ்ப்பாணம்
மருதடி வீதி— (வீடு) 2 பரப்புக்காணியுடன்

விபரங்களுக்கு:-

தோட்டக்காணிப் பிரிவு
த பினான்ஸ் கம்பனி லிமிட்.,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி- 021-23680

# பாகிஸ்தான் அணுகுண்டை வெடித்தால்

# அமெரிக்கா உதவிகளை நிறுத்தும்!

வாஷிங்டன், டிச. 7

பாகிஸ்தான் அணுகுண்டை வெடித்தால் அமெரிக்கா அதற்கு வழங்கிவரும் எல்லா உதவிகளையும் நிறுத்தி விடுமென்று அமெரிக்க அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

நவீனமின் அணு சாதனம் பொருத்தப்பட்ட 'எப்–16' ரக விமானங்களை அமெரிக்கா பாகிஸ்தானுக்கு வழங்கவுள்ள வேளையிலேயே இவ்வெச்சரிக் சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

முதல் தொகுதியாக ஆறு 'எப்–16' ரக விமானங்கள் விரைவில் பாகிஸ்தானுக்கு அனுப்பப்படவுள்ளது

பாகிஸ்தானில் மனித உரிமை மீறப்படுவது குறித்தும் அமெரிக்க அதிகாரிகள் கவலைகொண்டுள்ளனர். அங்கு மீண்டும் ஜனநாயகம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை அமெரிக்காவில் தற்போது விஜயம்மேற்கொண்டிருக்கும் பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக் அமெரிக்–பாகிஸ்தான் விஞ்ஞான, பொருளாதார, கலாச்சார உறவுகளை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளார்.

அமெரிக்கா சார்பில் அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் இவ்ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

பாகிஸ்தானில் இராணுவத் தளங்களை அமைக்க அமெரிக்காவிற்கு இடமளிக்கப்படமாட்டாதென்று ஜெனரல் 'ஷியாவுல் ஹக் நிருபர்களிடம் தெரிவித்தார். (வெ)

---

சட்டப்பேரவை

## இடைத்தேர்தலில்

## இந்திரா காங்கிரஸ் வெற்றி

புதுடில்லி, டிச. 7

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நான்கு சட்டப் பேரவை இடைத்தேர்தல்களில் இரண்டில் இந்திராகாங்கிரஸ் வெற்றிபெற்றுள்ளது. ஒரு தொகுதியில் இந்தியகம்யூனிஸ்ட்கட்சி வெற்றிபெற்றது. மற்றொருதொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் பெரும் வாக்குகள் வித்தியாசத்தில் முன்னணியிலுள்ளார்.

உத்தரப் பிரதேசத்திற்கான சட்டப்பேரவைத் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் திரு. ராஜேந்திரசிங்கும், பீகார்சட்டப்பேரவைத்தொகுதியின் இந்திராகாங்கிரஸ்வேட்பாளர் திரு. விஜயகுமார் சௌத்ரியுமே வெற்றிபெற்றவர்களாவர்.

மேற்குவங்காளசட்டப் பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் இந்திய கம்யூனிஸ்கட்சி வேட்பாளர் வெற்றிபெற்றுள்ளார். (வெ)

---

## புலோலி நூலககுறைபாடுகளை நீக்கஎம்.பி.யிடம் கோரிக்கை

(கரவெட்டி)

யாழ். மாவட்ட அபிவிருத்திசபை புலோலி உப அலுவலக பொதுசன நூல் நிலையத்திற்கு மின்சாரவசதி இல்லாமையினால் இப்பகுதி மக்கள் பெருங்கஷ்டமனுபவித்து வருகின்றனர். இக் கஷ்டத்தை நீக்குமுகமாக இப் பொதுசன நூல்நிலையத்திற்கு மின்னிணைப்பு வழங்க ஆவன செய்யவேண்டுமென்று பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினத்திடம் கோரப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக வராத்துப்பளை இளைஞர் நன்னெறிக் கழகத் தலைவர் திரு. ஏ. என். எஸ்.திருச்செல்வத்தினால் பருத்தித்துறை எம். பி திரு கே. துரைரத்தினத்திற்கு மகஜர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

"இப்பொதுசன நூல்நிலையம் இவ் உப அலுவலகப் பகுதிப் பொதுமக்கள் மாணவர்களுக்குப் பெரிதும் உதவிவருவதுடன், இன்றியமையாததாகவும் இருக்கின்றது! ஆனால் இப்பொதுசன நூல்நிலையத்திற்கு மின்னிணைப்பு வழங்கப்படாமல் இருப்பதனால் இந் நூல்நிலையத்தினைப் பொதுமக்களும் மாணவர்களும் முழுமையாகப் பயன்படுத்திச் சேவையைப் பெறமுடியாது கஷ்டம் அனுபவித்து வருகின்றனர். இந்நூல் நிலையத்தில் தளபாடப் பற்றுக்குறை நிலவுவதால் இங்குவரும் வாசகர்கள் மிகக் கஸ்டமனுபவித்து வருவதனால் இத்தளபாடப் பற்றுக்குறையைப் போக்கித் தர வேண்டும், இதற்கான நிதியை ஒதுக்கிவிமோசனம் அளிக்கவேண்டும்" என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

---

## வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களைப் பகிஷ்கரித்தனர்

இஸ்லாமாபாத், டிச. 7

பாகிஸ்தானில் பொதுத் தேர்தலை நடத்துமாறு கோரி கராச்சியில் நேற்று வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களைப்பகிஷ்கரித்தனர்

இவர்கள் நேற்று இரண்டு மணித்தியாலங்கள் அடையாள வேலைநிறுத்தத்திலும் ஈடுபட்டார்கள். (வெ)

---

## முப்படைகள் கொடித்தினம்

புதுடில்லி, டிச. 7

இந்திய முப்படைகளின் கொடித்தினம் இன்று நடைபெறுகிறது. இதனையொட்டி பிரதமர் திருமதி இந்திராகாந்தியும், ஜனாதிபதி திரு ஜெயில் சிங்கும் செய்திகளை வெளியிட்டுள்ளனர். (வெ)

---

அமெரிக்கா

## ஆயுத பலத்தைப் பெருக்கினால் சோவியத் எதிர் நடவடிக்கை!

### பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்

மாஸ்கோ, டிச. 7

"அமெரிக்கா 'எம் எக்ஸ்' ஏவுகணைகளைப் பொருத்தும் நடவடிக்கைகளைக் கைவிடாவிட்டால், சோவியத்யூனியன் கண்டம்விட்டுக்கண்டம்பாயும் புதிய ஏவுகணைகளை வைத்திருக்கவேண்டியேற்படும்".

இவ்வாறு சோவியத் பாதுகாப்பு அமைச்சர் பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர்அப்பேட்டியில் "அமெரிக்கா தமது ஆயுதபலத்தைப் பெருக்கும்முயற்சியில்ஈடுபட்டு வருவதால், சோவியத் யூனியனும் அதற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடத் தயங்காது" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை அமெரிக்க ஜனாதிபதி திரு றெனால்ட் றீகன் 'எம் எக்ஸ்' ஏவுகணைகளைப் பொருத்தும்அணுசகதித் திட்டத்தை உத்வேகப்படுத்தியுள்ளார்.

அமெரிக்கா அடுத்தஆண்டுப் பாதுகாப்பிற்காக21,400கோடி டாலர்களைச் செலவிட்டுள்ளது. (வெ)

---

## ரஷ்ய சம்மேளனத்தின் அபிவிருத்தித் திட்டம்

மாஸ்கோ, டிச. 27

"ரஷ்ய சம்மேளனத்தின் 1983ம் ஆண்டுக்கான வளர்ச்சித் திட்டம், மக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான கட்சியின் கொள்கைக்கு உகந்ததாக உள்ளது." என்று சோவியத் சம்மேளனத்தின் அமைச்சரவையின் துணைத் தலைவர் நிக்கொலாய் மாஸ்லெனிகோவ் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க் கிழமை இங்கு ஆரம்பமான சுப்ரீம் சோவியத்தின் கூட்டத் தொடரில் அவர் உரையாற்றினார். சோவியத் சம்மேளனம் சோவியத் யூனியனில், 14 கோடி மக்களைக் கொண்ட மிகப் பெரிய குடியரசாகும். இதன் 1982 ம் ஆண்டின் திட்டம் செயல்படுத்தப் பட்டதன் விளைவுகளும் 1983ம் ஆண்டுக்கான வளர்ச்சித் திட்டமும் கூட்டத் தொடரில் ஆராயப்பட்டன.

சோவியத் ஒன்றியம் ஸ்தாபிக்கப்பட்டதன் 60 வது ஆண்டுவிழாவுக்காக வேண்டி, ரஷ்யாவின் உழைக்கும் மக்கள் நல்ல விளைவுகளை ஏற்படுத்தியுள்ளனர், என்று மாஸ்லெனிகோவ் கூறினார்

"1981ல் தேசிய வருவாய் 2.7 சத வீதத்தால் உயர்ந்தது காரியாலய, தொழில் ஊழியர்களது மாதாந்த வருவாய் 2.8 சத வீதத்தாலும் கூட்டுப்பண்ணை விவசாயிகளது வருவாய் 4.6 சத வீதத்தாலும் உயர்ந்துள்ளது. 1983ம் ஆண்டில் திட்டம் தேசிய வருவாயிலும், தொழில்துறை, விவசாயம் ஆகியவற்றிலும் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றது அவர் வலியுறுத்தினார். மக்களது தேவைகளை மேலும் பூர்த்தி செய்யும் வகையில் 1983ம் ஆண்டின் தேசிய வருவாம் மேலும் உயரும்" என்றும் அவர் கூறினார்.

---

# பாண் விற்பனையில் மோசடி:

# ரூ. 1000 அபராதம்!

(புலோலி)

பாண் விற்பனையில் மோசடி செய்த பாண் பேக்கரி உரிமையாளர் ஒருவருக்கு 1000 ரூபா அபராதம் அல்லது 10 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

நெல்லியாவையைச் சேர்ந்த பேக்கரி உரிமையாளர் ஒருவருக்கே பாண் விற்பனையில் மோசடி செய்தமைக்காக இத் தண்டனை விதிக்கப்பட்டது.

வடமராட்சிப் பகுதியில் பாண் விற்பனையில் மோசடி நடைபெறுவதனால் பாவனையாளர்கள் பெரிதும் கஷ்டமனுபவித்துவருவதாகவும், இதற்கு உடன் நடவடிக்கை எடுத்து பாவனையாளர்களைப் பாதுகாக்குமாறும் பருத்தித்துறை பாவனையாளர் சங்கம் யாழ் உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இதனைத் தொடர்ந்து பாண் விற்பனையில் மோசடி செய்யும் வர்த்தகர்கள் மீது யாழ் உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தினர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல்செய்தனர்.

வழக்கை விசாரணைசெய்த நீதவான் திரு. வி பி. சுந்தரலிங்கம் பாண் விற்பனையில் மோசடிபுரிந்த இப் பாண் பேக்கரிக்காரருக்கு 1000 ரூபா அபராதம் அல்லது 10 மாத சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

---

சத்துணவுத்திட்டம்:

## ஆசிரியர்கள் வேலைநிறுத்தம்

சென்னை, டிச 7

சத்துணவுத் திட்டத்திலிருந்து தம்மை விடுவிக்கக் கோரி தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் தென்னாற்காடு, வட ஆற்காடு, நீலகிரி மாவட்டங்களில் நேற்று வேலைநிறுத்தம் செய்தனர். (வெ)

---

## பீகார் பத்திரிகை மசோதா திருத்தப்பட வேண்டும்

### செய்தி, ஒலிபரப்பு அமைச்சு அறிவிப்பு

புதுடில்லி, டிச. 7

பீகார் பத்திரிகை மசோதா திருத்தப்பட வேண்டுமென்று இந்திய செய்தி, ஒலிபரப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பத்திரிகைச் சுதந்திரத்தை நசுக்காதவாறு இம்மசோதா திருத்தி வமைக்கப்படவேண்டுமென அதுதெரிவித்துள்ளது.

இம்மசோதா பற்றி ஆராய்ந்த குழு தனது அறிக்கையை இந்திய செய்தி, ஒலிபரப்பு அமைச்சரிடம் கையளித்துள்ளது.

---

## தமிழ்க் காங்கிரஸ் பிரசாரக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

சர்வ ஜன வாக்கெடுப்பை எதிர்த்து தமிழ்க்காங்கிரஸின் பிரசாரக் கூட்டம் இம்மாதம் 11ம் திகதி யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் நடைபெறவிருக்கிறது [க]

### மணிவாக்கு

பத்திரிகைகள் ஒருமுறை எனது மரணத்தைப் பிரசுரித்திருந்தன; அதன் உண்மைக்கு ஆதாரம் எதுவும் உண்டா என்று ஆராய்ந்தளவில் எதுவும் இல்லை என்று என்னுல் அறிய முடிந்தது. முடிவை முதலிற்சொல்லி ஆதாரம் அதற்கெதிராகின் அது அபாயமான முயற்சியென முடிவுகட்டினேன்.

— பேற்றான்ட் ரசல்

## நமது நோக்கு

### பல்கலைக்கழகப் பெருவெள்ளம்

பல்கலைக்கழகப்பிரவேசத்தில் தமிழ் மாணவர்களே பெருந்தொகையானோர் என்ற 'கண்ணூறு' சில காலம் நிலவியது.

'யாழ்ப்பாணத்தின் 'பெரிய கடையில்' ஒருவர் எவரிலும்முட்டநேரிட்டால் அவர் கல்லூரி அதிபராகவே இருப்பார்' என்பது தென்னிலங்கையில் இதற்கு அளித்த விளக்கம்.

யாழ் பல்கலைக்கழகம் ஆரம்பமானதும் பேராசிரியர்களிலேயே முட்டுப்படும் பெரும் பாக்கியம் உண்டென்று பெருமிதப்பட்டவர் பலர்; பொருமைப்பட்டவர் சிலர்.

இவர்களின் உணர்வுக்குப் பேரிடி விழுந்தாற்போல் நிகழ்ந்ததே பேராசிரியர் கனகசபாபதி கைலாசபதியின் சடுதி மறைவு.

எடுத்தஎடுப்பிலே யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மிகத் திறமைவாய்ந்த கல்விப்பீடத்தை உருவாக்கிவிட்டதென்று நினைத்த பலருக்கு ஏமாற்றம் ஒன்ரு, இரண்டா? மூன்ருவதே ஏமாற்றத்தின் உச்சநிலை, யாழ். வளாகத்தை பல்கலைக்கழகமாக மாற்றி அமைக்கும்பணியில் தமுடைய அசாதாரண ஆளுமையை வெளிப்படுத்திய கல்விக்கடல் கைலாசபதி.

கணிதத் துறையைப்பலப்படுத்த அவர்தேடியழைத்த பேராசிரியர் கனகசபாபதி பல்கலைக்கழகத்துக்குக் கிடைத்த முதலிடி. இருவருடங்களில் அகால முடிவெய்திய புவியியல் பேராசிரியர் சோமசுந்தரம் செல்வநாயகம், யாழ்ப்பாணவிவசாயத் துறையில் பெரும் ஆய்வு நடத்தவிருந்தவர்.

தமிழ்ப் பேராசிரியர்கள் வரிசையில், சடுதிமறைவுகளான இவ்வொரு ஆய்வாளர் பேராசிரியர் தனஞ்சயராஜசிங்கம் (சிங்கி) கொழும்பில் கடமையாற்றியபோது யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் பற்றி அவர் நடாத்திய ஆய்வுகள் யாழ். பல்கலைக்கழகத்துக்கு உரிமையானதென்று அவற்றில் தொடர்ந்து கொண்டிருந்தவர்.

அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நெகிழும் என்ற பழமொழிக்கமைய எதனையும் கசடற அரைத்து ஆராயும் பேராசிரியர் கைலாசபதியின் மறைவு பல்கலைக்கழகத்தில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட 'வெள்ளத்தின்' பெருக்கெடுப்பைக் குறிக்கின்றது.

குறிப்பிட்ட பெரியோர்கள் எல்லோரும் தமிழிலும் சைவத்திலும், யாழ்ப்பாணத்திலும் பேரபிமானம் கொண்டவர்கள; இப்பகுதிக்கும் முழுநாட்டுக்கும்தங்கள் ஆய்வு மூலம் பெரும் பலன் அளிக்கும் ஆற்றல் பெற்றவர்கள் தங்களை உருவாக்க உதவிய யாழ். இந்துக்கல்லூரியே தாயென நேசித்தவர்கள்;

அக்கல்லூரியின்பரிசளிப்பு விழாவில் அதன் லட்சியத்தை ஞாபகப்படுத்திய பேராசிரியர் கனகசபாபதி இலட்சியங்களுக்கேற்பவாழ முயலவேண்டுமென வற்புறுத்தினர். அவருடைய குறிஞ்சிக்குமரன் அதனை என்றும் நினைவுறுத்துவான்.

இன்னெரு பரிசளிப்பு விழாவில் மறைந்தபேராசிரியர் கனகசபாபதி கூறியது:

இந்த யுக வாழ்க்கைக்கு அத்தியாவசியமானது: அனுஷ்டானம் — அறிவு— அனுஷ்டானம் — அறிவு ஆகும். நடைமுறை மூலம் அறிவைப் பெறவேண்டும் என்ருர்.

அது ஒய்வற்ற வளர்ச்சி என்று சொன்ன பேராசிரியர் ''மாஓசேதுங் எழுதிய 'நடைமுறை' நூலைக் குறிப்பிட்டு சைவ சித்தாந்தத்தில் அதற்குப் பொருத்தம் கண்டு விளக்கினர்.

''போகப் போகக் குறைகளைக் குறைத்து நிறைகளைக் கூட்டி நடைமுறை அனுபவம் மூலம் கல்விபெறலாம்'' என்பது அவரின் ஆராய்ச்சிக் கருத்து.

அரை வயதுக்குள் ஆவியுலகை நாடிய இப்பெரியோர்கள் கல்வி வளர்ச்சிக்கும் சமூக விருத்திக்கும் எத்தகைய சாதனைகள் ஆற்றியிருப்பார்கள்?

இலங்கைப் பல்கலைக் கழகத்தை உருவாக்கிய உலகப் புகழ் பெற்ற பேரறிஞர் சேர் ஐவர் ஜென்னிங்ஸ் தங்கள் பேராசிரியர் ஒருவரின் மரணம் குறித்து விடுதலை கோரிய மாணவர்களுக்கு ''நான் அலுவலகத்திலிருக்கும் போதே கண்மூட நேரிட்டால் திறப்புக் கோவைகள் தொடக்கம் சகல விபரங்களும் அதற்குரியவர்களுக்கு அறிவித்து, படிப்புக் குழம்பாமல்தொடரும் வகையில் ஏற்பாடு செய்திருக்கிறேன்'' என்று சொல்லி விடுதலை கொடுக்க மறுத்துவிட்டாராம்.

அது பிரிட்டிஷ் நீதி; தெய்வ நீதியும் கூட! அப்பெரியார் வேற்று நாடுகளில் ஆராய்ச்சி உரைகள் நடத்தி வீடு (இங்கிலாந்து) திரும்புப்போது கப்பல் சமுத்திரத்தில் தாண்டது; அதில் மரணமானுர்.

அவருடைய ஈமக் கிரியைக்கு தலைமை தாங்கிய மதத்தலைவர் தமக்கு மூன்று நூற்றுண்டுகளுக்குமுன் அப்பதவியிலிருந்த (Dean of-St Paul's) ஆங்கிலப் புலவன் ஜோன்டன் (John-Donne) இது போன்றவையவதில் நடத்திய பேருரையைக் குறிப்பிட்டாராம்.

''ஒருவர் இறக்கும்போது நூலின் ஒரு அத்தியாயம் கிழிக்கப்படுவதில்லை; அது இன்னும் சிறந்த மொழியில் மொழி பெயர்க்கப்படுகிறது; ஒவ்வொரு அத்தியாயமும் அவ்வாறே மொழி பெயர்க்கப்படுகிறது: இறைவன் பல மொழி பெயர்ப்பாளர்களை இவ்வேலையில் ஈடுபடுத்துகிறுன்; முதுமை, நோய் யுத்தம், தீ, நீர் போன்றவர்களே இவர்கள்; ஆனல் இறைவனின் கைவண்ணம் ஒவ்வொன்றிலும் காணப்படுகிறது கடைசியாக அந்த நூல் முடிவடைந்ததும் எல்லோருக்கும் பயன்படக்கூடிய நூல் நிலையத்தில் அது காணப்படும்; ஒருவர் கருத்தை இன்னெருவர் பகிர்ந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கும்''

சேர் ஐவர் ஜென்னிங்ஸ் என்று உலகம் பாராட்டும் அரசியலாய்வு நிபுணருக்கு இது எவ்வளவு பொருத்தமோ 'குப்பையிலும்கூழதிலும்' பொறுக்கி எடுக்கும் கடதாசித் துண்டுகளிலேயே பேராய்வு நடத்தி வந்த அமரர் கைலாசபதிக்கு அவ்வளவு பொருத்தம் இந்த அருளுரை.

தமிழ் முனிவர் எப்பவோ சொல்லிவிட்டார்;

'வெள்ளத்து அனைய
இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக்
கெடும்''

# கைலாசபதி மறைவு மாணவ இலக்கிய உலகின் பேரிழப்பு!

இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத்தின் முதலாவது தலைவராக 1974 ம் ஆண்டு பதவியேற்ற பேராசிரியர் கனகசபாபதி கைலாசபதி மலேசியாவில் பிறந்து அங்கு தமது ஆரம்பக்கல்வியை மேற்கொண்டார்.

மலேசியாவிலிருந்து இலங்கை வந்த கைலாசபதி தனது இரண்டாம் தரக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மேற்கொண்டு, பட்டப்படிப்பை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கற்று, தமிழில் முதலாம் தரத்தில் சிறப்புப்பட்டம் பெற்று வெளியேறினர்.

இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகம் 1974ம் ஆண்டு நிறுவப்பட்டபோது அதன் முதலாவது தலைவராகவும், தமிழ்ப் பேராசிரியராகவும் கைலாசபதி பதவியேற்ருர்.

இவர் தலைவராகப் பதவியேற்றவுடன் யாழ்ப்பாண வளாகத்தைக்கட்டியெழுப்பும் பெரும்பணியில் ஈடுபட்டு அல்லும் பகலும் சேவையாற்றினர்.

1974ம் ஆண்டு யாழ்ப்பாண வளாகத்தின் முன்னேடி மாணவர்களிலொருவராக நானிருந்தபோது, பேராசிரியர் கைலாசபதி மாணவர்களின் பிரச்னைகளை அணுகி அவற்றைச் சென்று, அமைச்சு உயரதிகாரிகளை நேரடியாகச் சந்திக்க வைத்து அவர்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகளை ஏற்படுத்திக் கொடுத்தார்.

யாழ்ப்பாண வளாகத்தில் நடைபெறும் இலக்கியக் கூட்டங்களோ, தமிழ் விழாக்களோ, வைபவங்களோ பேராசிரியர்கைலாசபதி இன்றி நடைபெறுது. இத்தகைய விழாக்களையும், வைபவங்களையும் நடத்தமுன்னர் மாணவர்கள் பேராசிரியர் கைலாசபதியிடம் சென்று ஆலோசனை கேட்பார்கள். அவர் அதற்கான ஆலோசனைகளை வழங்கி விழாக்களும், வைபவங்களும் திறம்பட நடைபெற வழிவகுத்துக் கொடுப்பார்

பேராசிரியர் கைலாசபதி விரிவுரைகளை நிகழ்த்துகின்றபோது அவரது விரிவுரையின்போது நகைச்சுவையும் கலந்திருக்கும் மாணவர்களுக்குநேரம் போவதே தெரியாது. சிறுகதைகளை விமர்சனம் செய்கின்றபோது தமக்கே உரிய இலகுவான பாணியில் மாணவர்களுக்கு புரியும் வண்ணம் நகைச்சுவை ததும்ப விமர்சனஞ்செய்வார்.

#### தி. வெற்றிவேலுப்பிள்ளை

தினகரன் பத்திரிகையில் சிறிதுகாலம் அசிரியராகக் கடமையாற்றிய பேராசிரியர் கைலாசபதி பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் பதவியேற்ருர். அங்கு இவர் விரிவுரையாளராகவிருந்த காலத்திலே விடுதிப்பொறுப்பாளராகவும் பணியாற்றி மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்ருர்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பதவி வகித்த காலத்திலே பேராசிரியர் கைலாசபதி அங்கு தமிழ் இலக்கியமன்றங்களின் ஆலோசகராக விளங்கியதுடன் தமிழ்த்துறைக்கும் பல்வேறு வகைகளில் சேவைபுரிந்தார்.

லண்டன் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியினை மேற்கொண்டு தமிழ்மொழியில் கலாநிதிப்பட்டம் பெற்ற கைலாசபதி கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளராக நியமனம் பெற்ருர்.

தன்னுல் தீர்வுகாண முடியாத பிரச்னைகள் தொடர்பாக மாணவர்சங்கப் பிரதிநிதிகளை கொழும்புக்கு அழைத்துச் சென்று தீர்த்துவைப்பதில் செயல்பட்ட விதத்தை மறக்கமுடியாது.

யாழ்ப்பாணவளாக மாணவர் சங்கத்தின் உபதலைவராக நான் இருந்தபோது, மாணவர்களின் பிரச்னைகள் தொடர்பாக பலமுறை அவரைச் சந்தித்துக் கலந்துரையாடும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

பெருமளவு சிங்கள மாணவர்களும் யாழ்ப்பாண வளாகத்தில் கல்விபயின்ற அந்த காலகட்டத்திலே யாழ்ப்பாண வளாகத்தில் நிலவிவந்த மாணவர் பிரச்னைகளை சுமுகமாக அணுகி, இன்முகத்துடன் மாணவர்சங்கப் பிரதிநிதிகளை வரவேற்று, அவர்களின் பிரச்னைகளைத் தீர்த்துவைப்பதில் பேராசிரியர் கைலாசபதி மேற்கொண்ட பணிகளை எவராலும் மறக்கமுடியாது.

அவ்வாறே இலக்கியத்துறையிலும் தனித்துவத்துடன் அவர் திகழ்ந்தார். பேராசிரியர் கைலாசபதி அமெரிக்கா சென்று ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். இவர் பல இலக்கிய, விமர்சன நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். இவை இந்தியாவில் பாடநூல்களாகவுள்ளன.

தலைசிறந்த கல்விமானுகவும், விமர்சகராகவும், பத்திரிகையாளனுகவும் விளங்கிய பேராசிரியர் கைலாசபதியின் திடீர் மறைவு கல்வி, இலக்கிய, மாணவ உலகிற்குப் பேரிழப்பாகும்.

# நாட்டையும் மண்ணையும் மனப்பூர்வமாக நேசித்தவர்

பேராசிரியர், கலாநிதி கனகசபாபதி கைலாசபதி காலமானுர் என்ற சேதி தமிழ் உள்ளங்கள் அனைத்துக்குமே பேரதிர்ச்சி தரும் செய்தியாகும்.

இந்த நாட்டையும், இந்த மண்ணையும் மனப்பூர்வமாக நேசித்த அவர் தாம தெரிந்தெடுத்துக்கொண்ட வழியில் பூரண நம்பிக்கை வைத்து அந்த இலட்சியத்தின் ஈடேற்றத்துக்காக அயராது உழைத்துவந்தார். அவரது சிந்தனைகள், எழுத்துக்கள், சொற்பொழிவுகள் யாவற்றிலும் அவரது லட்சியநோக்கு செறிந்து கிடப்பதைக் காணலாம்.

பேராசிரியர் கைலாசபதி தினகரன் பத்திரிகையின் ஆசிரியராகப் பதவி வகித்தகாலம் இந்த நாட்டின் இலக்கியவாதிகளின் பொற்காலம் என போற்றப்படுகின்றது. உண்மையில் அந்தக் காலத்தின்தான் நமது இலக்கியத் துறையில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

#### பி. எஸ். பி.

இந்திய எழுத்தாளர்களின் படைப்புக்களை தாவித்தும், இந்திய பின்னணியைப் பிணைந்து இலங்கைஎழுத்தாளர்களை எழுத வைத்தும இங்கேயுள்ள பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் பிரசுரித்து வந்த காலம் அது.

அந்த நிலைமையை முற்ருக மாற்றி ஈழத்து எழுத்தாளனுக்கு இந்த நாட்டில் ஒரு இடத்தை-ஒரு மதிப்பை — ஒரு மாண்பினை உருவாக்கித் தருவதற்குத் தமது பதவியையும் பத்திரிகையையும் அவர் வெகுவாகப் பயன்படுத்திஞர்

விமரிசனத் துறையில் அவர் ஏற்படுத்திய சர்ச்சைகளும், சாதுர்யமான வாதங்களும் ஈழத்து எழுத்தாளர்கள் தமது தடத்தினைச் சரியாகப் புரிந்து கொள்ளவும் வெறும் கற்பனைகளை மட்டும் எழுதுவதை கைவிட்டு லட்சியப பிடிப்போடும் சமுதாய பார்வையோடும் எழுதவும், அத்துறையில் ஏறுநடைபோடவும் அவர்களுக்கு உதவின.

பத்திரிகைத் துறையிலிருந்து விலகி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளரரக சிறிது காலம் பணிபுரிந்த கைலாசபதி அவர்கள், மேல் நாடு சென்று கலாநிதிப் பட்டத்திற்கான பயிற்சியைமுடித்துக்கொண்டு நாடுதிரும்பினுர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் உருவாவதற்கு முதற்படியாக அமைந்த யாழ்ப்பாண வளாகத்தின் முதல் தலைவராக அமர்ந்து அவர் ஆற்றியபணி அளப்பரியது. அந்த வகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக சரித்திரத்தில் அவரது பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்பதில் சந்தேகமில்லை.

அவரது ஈழத்து இலக்கிய விமர்சனங்களும், ஆய்வுகளும் ஒப்பீடுகளும் அறிஞர் உலகின் மதிப்பைப் பெற்றவை. இத்துறைகளில் அவர் எழுதிய நூல்களை இந்திய பிரசுரகர்த்தாக்கள் விரும்பி ஏற்று பிரசுரித்தார்கள் அவரது ஆய்வு நூல்கள் அங்கு பாட நூலாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

நாற்பத்தொன்பதே வயதான பேராசிரியர் தமது குறு

(5-ம் பக்கம் பார்க்க)

எதிர்காலத்தில் பெரும் ஆதரவாக மாறியிருக்கக்கூடிய

# "ஒருமார்க்ஸிய சித்தாந்த வாதியை தமிழீழம் இழந்துவிட்டது

## யாழ். மேயர் விசுவநாதன் இரங்கல்

விஞ்ஞான சோசலிசத்தைத் தனது அரசியல், பொருளாதாரக் கொள்கையாக வகுத்துக்கொண்டிருக்கும் உத்தேச சுதந்திரத் தமிழீழ அரசுக்கு எதிர்காலத்தில் பெரும் ஆதரவாகவும், ஊன்றுகோலாகவும் மாறியிருக்கக்கூடிய ஒரு மார்க்சீய சித்தாந்வாதியைத் தமிழ் ஈழம் இழந்துவிட்டது''

''இவ்வாறு யாழ். மாநகர மேயர் திரு இராஜா விசுவநாதன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

தோழர் கைலாசபதி பெரும் கல்விமானகவும், சிறந்த இலக்கிய விமர்சகராகவும் திகழ்ந்து ஈழத்திலும், தாய்த் தமிழகத்திலும் பல ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டிருப்பவர். தமிழ் இலக்கியத்துக்கு ஸ்ரீலங்காஅரசுநடத்திய சாகித்திய மண்டலப் பரிசுகள் பெற்குருப்பவர். யாழ் பல்கலைக்கழகத்திலும், அதற்கு அப்பாலும் பல அவைகளிலும் உறுப்பினராக இருந்து முற்போக்காக பல துறைகளில் செயலாற்றிய ஒருவர் என்று தெரிவித்துள்ள திரு. விசுவநாதன் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;-

மார்க்சிச-லெனினிச சித்தாந்தத்தை தமிழீழ மண் வளத்துக்கு இயைபாக பிரயோகிக்கும்சோதனைகளை மேற்கொள்ளும் வாய்ப்பையும் அதில் அவர் புதியசாதனைகளை நிலைநாட்டும் சந்தர்ப்பத்தையும் காலன் கெடுத்துவிட்டான்.

தமிழீழமண்ணின் விடுதலைக்கும், வளத்துக்கும் சர்வதேகிய சித்தாந்தமான விஞ்ஞான சோசலிசக் கருத்துக்களைப் பிரயோகித்து, சோதனைகள் நடத்தி அவற்றில் வெற்றிவாகை சூட்டுவதே அன்னரின எதிர்காலவாஞ்சையாக முகையவிழ்ந்திருக்கக்கூடிய எதிர்பார்ப்புகள் இலட்சியங்களுக்கும், தோழர் கைலாசபதி அவர்களுக்கும் அவர் பாரம்பரியத்தில் வந்தோர் செய்யக் கூடிய கைமாறுகும்.

# இந்த இழப்புக்கு எப்படி ஈடுசெய்யப்போகிறேம்?

## 'மல்லிகை' ஆசிரியர் இரங்கல்

[யாழ்ப்பாணம்]

மல்லிகை ஆசிரியர் திரு டொமினிக்ஜீவா பேராசிரியர் கைலாசபதியின் மறைவு குறித்து வெளியிட்ட இரங்கல் செய்திவருமாறு;

மாபெரிய இலக்கிய ஆசானும் மறுமலர்ச்சி விமர்சகருமான கைலாசபதி அவர்களின் இழப்பை நினைக்கும்போது இந்த இழப்புக்கு எப்படி ஈடு செய்யப்போகின்றேம் என்பதை நினைக்கவே முடியாமல் இருக்கின்றது.

இலக்கியப் பிரச்னை ... எதுவாக இருந்தாலும் சந்தேகம் வந்துவிட்டால் இதைப்பற்றிக் கைலாசபதி இப்படிக் கூறியுள்ளார் என மேற்கோள்காட்டி நிருபிக்குமளவிற்குத் தமிழகத்தில் தரமான இலக்கியவாதிகள் மத்தியில் ஒரு ... நிலவிவருகின்றது. அப்படியாகத் தனது இலக்கிய ஆராய்ச்சியாலும் அறிவு ஆளுமையாலும் தமிழ்கூறும் நல்லுலகின் மதிப்பையும் கௌரவத்தையும் பெற்றுக் கொண்டவர் கைலாசபதி அவர்கள்.

கடந்த பல ஆண்டுகளாகவே இலக்கியத்துறையில் கடுமையாக உழைத்துவந்துள்ளார். இவரது ஆராய்ச்சி நூல்களுக்கு தனி பானமதிப்பு இருந்து வந்துள்ளது. சென்னையில் இவரது நூல்கள் பல வெளிவந்துள்ளன.

தினகரன் பத்திரிகையில் இவர் ஆசிரி[illegible] டலமயாற்றியகாலத்தில் இந்நாட்டு எழுத்தாளர்கள் பலரை உருவாக்கியுள்ளதுடன் அவர்களை சரியான திசைவழிகளில் நெறிப்படுத்தியுமுள்ளார்.

மிகச்சிறந்த முற்போக்குச் சிந்தனையாளர் ஈழத்தில் காத்திரமான ஓர் இலக்கியப் பரம்பரையை உருவாக்குவதில் சலியாத உழைப்பை நல்கிக் கட்டிக்காத்து வளர்த்தெடுக்க முன்னின்று உழைத்தவர்.

'இவரது இழப்பு[illegible] உடனடியாக நமக்கும் நம் நாட்டிற்கும் எமது மொழிக்கும் தெரியாமல்போகலாம் காலம் செல்லச்செல்ல ...

கைலாசபதியின் இலக்கிய ஆளுமையின் பரிணாமமும் அறிவுச்செழுமையில் மெருகும் தமிழ்கூறும் நல்லுலகத்துற்கு அவரை அடிக்கடி ஞாபகப் படுத்திக்கொண்டே யிருக்கும்.

நண்பர் கைலாசபதியுடன் ஒரு இலக்கியசகாப்தம் முற்றுப்பெறுகின்றது.

## பணியாளர் சங்கம் கவலை

[யாழ்ப்பாணம்]

மாணவர்கள் ஊழியர்கள் என்று வேறுபாடின்றி எல்லோரும் சமம் என்ற சமத்துவ சகோதரத்துவ நோக்குடன் அன்பாகப் பழகிய பண்பாளராம் பேராசிரியர் அவர்கள் யாழ். நகரில் ஓர் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென்று அயராது உழைத்தவர். நமது பல்கலைக் கழகத்தின் ஆரம்ப காலத்தலைவராக இருந்து பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியையே தன் உயிர் மூச்சாகக் கொண்டு உழைத்த உத்தமரை நாம் இன்று இழந்துவிட்டோம், இன்னும் பல்லாண்டு காலம் பதவியில் இருந்து பணியாற்றவேண்டிய பகலவன் மறைந்துவிட்டான். இந்த மறைவு தமிழ் உலகுக்கு எதனாலும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்'.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழகப் பணியாளர் சங்கம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'நேற்று இருந்தவனை இன்று இல்லாமல்செய்வதில்தான் இவ்வுலகம் பெருமைகொண்கின்றது. மன்னும் இமயமும் கங்கையொடு உயர் காவிரியும் உள்ளவரை பேராசிரியர் அவர்களது நினைவும் நிலைகொள்ளும்' என்று அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## 'விடிவெள்ளியாக திகழ்ந்தவர்'

(யாழ்ப்பாணம்]

தமிழ் இலக்கியத் துறையிலும் சரி, சமயத்துறையிலும் சரி, கூட்டுறவுத்துறையிலும் சரி, தமிழ்மக்கள் மத்தியில் விடிவெள்ளியாகப் பிரகாசித்த யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் கனகசபாபதி கைலாசபதியின் திடீர் மறைவு தமிழ் பேசும் மக்களுக்கு ஓர்பேரிழப்பாகும்.

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு க. அருணசலம், பேராசிரியர் க. கைலாசபதியின் திடீர் மறைவு குறித்து விடுத்த இரங்கற் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

## திருவாசகவிழா

[யாழ்ப்பாணம்]

ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்ட ஆதரவில் திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தில் திருவாசகவிழாவும் சாதனையும் இம்மாதம் 21ம் திகதி முதல் 30ம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் திருவெம்பாவை பாராயணம், புராண படனம், கூட்டுவழிபாடு, கருத்தரங்கு, சிவபூசைமாநாடு, சொற்பொழிவு ஆகியன இடம் பெறவுள்ளன. (வெ)

## அவள் அரசில் இடம்கேட்டு இறைஞ்சுவோம்

பாம்பொருளின் பிறப்புக்கென இயற்கையின் வழமைகள் மாற்றப்பட்ட ஒரு மகத்தான படைப்பு உருவாக்கப்பட்டது. அவள்தான் பரியாள் எனும் மாதரசி. இறைவனின் தாய்

(8-ம் பக்கம் பார்க்க)

# அறிவின் சுடரொளி

அறிவின் சுடரொளி ஒன்றை நான் மனிதவுருவில் கண்டதுண்டு. பேராசிரியர் கைலாசபதி என்று அவர் திருநாமம். மண்ணில் அவர் வரவால் மகிழ்ந்தாள் தமிழ் அன்னை. அவரின் எழுத்தால் விரிந்த உள்ளங்கள் பல. அவரது அறிவால் ஒளிபெற்ற நெஞ்சங்கள் பல. ஏழையின் குரலுக்கு இலக்கிய உரிமை தந்த பேராளியவர். அவரது எழுத்துக்களில் ஒரு போராட்டம நிலமானிய இருள் சுவிந்த தமிழ் இலக்கிய உலகில் சிந்தனை ஒளியேற்றும் போராட்டம். மகிழ்ந்தனர் பாட்டாளிகள், புகழ்ந்தனர் சாமான்யமனிதர்கள். ஆனல்...ஆனல் 49ம் நிறைடா எங்கள் பேராசிரியரின் அறிவுப்பணியை இயற்கை தடுத்துவிட்டது. நோய் உருவிலே எங்கள் கைலாசபதியை கவர்ந்துசென்றுவிட்டது இயற்கை. பேராசிரியர் மறைந்த செய்தியைக் கேட்டு இங்குமட்டுமல்ல இந்தியா உட்பட எங்கெல்லாம் தமிழர் வாழ்கின்றுர்களோ எங்கெல்லாம் தமிழாய்வு நிகழ்கிறதோ-வறுமைப்போர் தொடர்கிறதோ -வாழத்துடிக்கும் நெஞ்சங்கள் உண்டோ-அங்கெல்லாம் கண்ணீர் வெள்ளம் தேங்கப் போகின்றது.

பாரதிக்கு 39, பேராசிரியர் சுந்தரம்பிள்ளைக்கு 42, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்திற்கு 29 மானிடம் பயனுற வாழ்ந்தவர்களுக்கெல்லாம் இறக்க விதித்த இந்தக் குறுகிய எல்லையை எங்கள் அறிவுப்பேரொளிக்கும் வகுத்துவிட்ட கொடுமையை எண்ணிக் குமுறுகிறேம். தமிழ் மண்ணில் எழுந்த முதற் பல்கலைக்கழகத்தின் தலைவனக நின்ற தலைமகன் மறைந்துவிட்டான். சிறுபட்டம்பெற்றவுடன் சீமைக்குச் சென்று சிருங்கார வாழ்வினலே தாய் மண்ணை மறப்பவர்கள் வாழ்கின்ற பூமியிலே பல பட்டம் பெற்றும் தன் உழைப்பை உதிரத்தைத் தன் மண்ணில் அறிவு துளிர்க்கத் தெளித்த உத்தமன் மீளா உறக்கம் கொண்டுவிட்டான். பத்திரிகையாளனய் வாழ்க்கையிலே எத்தகைய எளிமை வாழ்வை வாழ்ந்தாரோ அதேஎளிமைத் தோற்றத்தை பல்கலைக்கழகத்துப் பேரறிஞரான பின்பும் வாழ்ந்த இலட்சியவாதியவர்

சூ. யோ. பற்றிமாகரன்

## நாட்டையும...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கிய வாழ்நாளில் ஆற்றிய பணிகள் அனந்தம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைத்துறை பீடாதிபதியாகவும், பேராசிரியராகவும் அமர்ந்து நாட்டுக்கும், எதிர்கால இளைஞர் சமுதாயத்துக்கும் பெருமபணியாற்றி வந்த அவரை இடைநடுவில் காலன் கவர்ந்துகொண்டுவிட்டது எமது துர்ப்பாக்கியம்.

தாம் ஏற்றுக்கொண்ட துறையில் இன்னும் எத்தனையோ அருமந்த பணிகளை அவர் மேற்கொண்டு சாதிக்க வேண்டுமென தமிழ்ச் சமுகாயம் எதிர்பார்த்திருந்த வேளையில் அவர் நம்மை விட்டுப் பிரிந்துள்ளார்.

அவரது இந்தப்பிரிவு தனிப்பட்ட முறையில் அவரது குடும்பத்தாருக்கு பேரிழப்பாகும். என்றுலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு- அறிஞர் குழாத்துக்கு -ஈழத்து இலக்கியத்துறைக்கு-ஏன் தமிழர் சமுதாயம் முழுமைக்குமே ஈடு செய்யமுடியாத இழப்பு என்று குறிப்பிடுவது மிகையாகாது.

# பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு உழைத்த உத்தமர்


## ஆசிரியர் சங்கம் அஞ்சலி

பேராசிரியர் கைலாசபதி வெகுவிரைவில் எம்மை விட்டுக் காலனல் பிரிக்கப்படுவார் என்பது எம்பால் கற்பனைசெய்தும் பார்க்கமுடியாத நிகழ்ச்சியாகும். பல்கலைக்கழகத்தைப் பொறுத்த மட்டில் அதன் வளர்ச்சிக்கு உழைத்தஉத்தமர் அவர். ஆரம்ப காலத்திலேயே தனது திறமையால் பலவகையிலும் அதை வளர்த்தெடுக்க அயராது உழைத்தவர். அவர் காலத்தில் நிர்வாகத்தில் அவர் கொண்ட அக்கறை கறையற்ற நிர்வாகத்திறமை ஆகியவற்றைப் பாராட்டாதவர் எவருமிலர்!

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கச் செயலாளர் கலாநிதி சி.க. சிற்றம்பலம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியரின் இழப்பு ஒரு தனிக்குடும்பத்திற்கு ஏற்பட்ட இழப்புமட்டுமல்ல கணவனைப் பிரிந்து வாழும் மனைவி, அன்புத் தந்தையை இழந்திருக்கும் குழந்தைகளுக்கு ஈடு செய்ய முடியாது எல்லாவற்றுக்கும் மேலாக அவர்வளர்த்தெடுத்த தமிழுலகம், பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கும், மாணவ, ஆசிரிய நண்பர்களுக்கும் என்றென்றும் நினைவிலிருந்து நீங்காத ஒரு பெருவெற்றிடமாகுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


மற்றுமொரு பொன்னன சந்தர்ப்பம்




கோல்ட் ஸ்டார்
20" வர்ணத் தொலைக் காட்சி

சிறப்பு அம்சங்கள்:
- துரித இயக்கப் படக் குழாய்... நான்கு விநாடிகளில் படமும் ஒலியும் கிடைக்கின்றன. சூடேற வேண்டிய அவசியமில்லை.
- தன்னியக்க வர்ணக் கட்டுப்பாட்டு அமைப்பின் மூலம் வேறுபடும் வர்ணப் படங்களின் செறிவு தானகவே தரப்படுத்தப்படுகின்றது.
- காந்தவியல் தலையீட்டினல் வர்ணப் படத்தில் கறைகளைத் தன்னியக்க ''டிகோஸர்'' சாதனம் போக்குகின்றது.
- 1 வருடகால உத்தரவாதமும் விற்பனைக்குப் பின் பராமரிப்புச் சேவையும்.
- அடக்கமான அளவு-50 செ.மி; எங்கும் வைக்கக்கூடியது.

கோல்ட் ஸ்டார்
வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை வாங்குங்கள்_நிகரற்ற செயற்திறன், நிகரற்ற விலை.
ஏகமுகவர்கள்:
பான் ஏசியா லிமிட்டெட்
விற்பனை நிலையங்கள்:
கொழும்பு-172, கெய்சர் வீதி, கொழும்பு 11. தொலைபேசி: 26598, 22376
காட்சியறை; 666, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 589794
திருகோணமலை- 57, தபால் நிலைய வீதி, திருகோணமலை.
யாழ்ப்பாணம்- 95, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7697
நாட்டிலுள்ள ஏனைய பிரபல வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

“தெங்கு ப. பொ. உ. விற்பனவு

# கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்த சபை தயாராக இருக்கிறது”

## தலைவர் அழைக்கிறார்

(மாவிட்டபுரம்)

“தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள், முடிந்தவரை பனைதொடர்பான கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட வேண்டும். தமது உற்பத்திப் பொருட்களை விற்கமுடியவில்லையே என்று அவை கவலைப்படத்தேவையில்லை. இச்சங்கங்கள் உற்பத்தி செய்யும் பனம்பொருட்கள் யாவற்றையும் பனம்பொருள் அபிவிருத்திசபை வாங்கி சந்தைப்படுத்த தயாராகவிருக்கிறது. எவ்வளவு பொருட்களானாலும் நாம் பணம் கொடுத்து வாங்கி ‘‘கற்பகம்’’ விற்பனை நிலையங்கள் மூலம் சந்தைப் படுத்துவோம்’,

இவ்வாறு கீரிமலையையடுத்த வசந்தபுரத்தில் தெல்லிப்பழை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் 3 லட்ச ரூபா செலவில் அமைந்துள்ள போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலைத்திறப்புவிழாவில் கலந்துகொண்டு இயந்திர சாதனத்தை இயக்கிவைத்துப் பேசிய பனம்பொருள் அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு. க. நடராசா கூறினார்.

தெல்லிப்பழை தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. பூ. இரத்தினம் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் கூறியதாவது:-

‘‘எந்தத் துறையை எடுத்தாலும் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமெனக் குரல் எழுப்பப்படுகிறது. ஆனால் சீவல் தொழிலாளர்கள் இறக்கும் கள்ளில் பெரும்பகுதி இதுவரை காலமும் வீணே ஊற்றப்பட்டு வந்துள்ளது. வாழ்க்கைச்செலவு அதிகரித்துள்ள இன்றைய நிலையில் சீவல் தொழிலாளர்கள் பெரிதும் இன்னலுக்குட்பட வேண்டி நேர்ந்தது. ஆனால் இப்படியான போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலைகள் வீணே ஊற்றப்படும் கள் பயனுள்ள முறையில் பயன்படுத்தப்பட உள்ளதால் சீவல் தொழிலாளர்களுக்கும் நல்ல பயன் உண்டு.

[7-ம் பக்கம் பார்க்க]


# மேர்ச்சன்ட் பினன்ஸ்

## லிமிட்டெட்.

## நிலையான வைப்புத் திட்டங்கள்

| காலம் | மாதாந்த வட்டி கொடுத்தல் | காலமுடிவில் வட்டி கொடுத்தல் |
|---|---|---|
| 7 மாத வைப்பு (வருட வட்டி) | —— | 19% |
| 9 மாத வைப்பு ( ,, ,, ) | —— | 22% |
| 1 வருட வைப்பு ( ,, ,, ) | 24% | 25% |
| 2 வருட வைப்பு ( ,, ,, ) | 24% | 27% |
| 3 வருட வைப்பு ( ,, ,, ) | 24% | 30% |

- நிலையான வைப்புக்கணக்கு தொடங்குவதற்கு செலுத்தவேண்டிய குறைந்த தொகை ரூபா 1000/- மட்டுமே.
- வட்டி மாதாமாதம், மூன்று மாதத்திற்கொரு முறை, ஆறு மாதத்திற்கொரு முறை, வருடமொருமுறை வைப்புப்பணம் கொடுத்தவர்களின் விருப்பப்படி கொடுக்கப்படும்.

(1979-ம் ஆண்டின் 27-ம் இலக்க, நிதிச் கம்பனிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் 18-ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட 1981-ம் ஆண்டின் 1-ஆம் இலக்க விதிகளின் படி, கீழ்க்காணும் தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.)

கூட்டிணைக்கப்பட்ட தேதி : 2-5-1979.

பிரதான தொழில்வகைகள் :

✶ வியாபாரப் பொருட்களின் பொறுப்பில் கடன் வழங்கல், வங்கி, மறுதாபனக் கடன் ஒழுங்கு செய்தல், வர்த்தக வாகனங்கள் (லொறி) உழவு யந்திரங்கட்கு (ட்ராக்டர்) மினிபஸ் முதலியனவற்றிற்கு வாடகைக் கொள்வனவுக்குக் கடன் கொடுத்தல், இடைக்கால கடன் வழங்கல், காப்புறுதி செய்யப்பட்ட பண்டகசாலை வசதிகள்.

| | 31-3-80ல் முடிந்த ஏழு மாதத்திற்கு | 31-3-81ல் முடிந்த வருடத்திற்கு | 31-3-82ல்* முடிந்த வருடத்திற்கு |
|---|---|---|---|
| | ரூ, 000 | ரூ, 000 | ரூ, 000, |
| பங்கு மூலதனம் ... | 69, | 100, | 100, |
| ஒதுக்கிய நிதி ... | — | — | 300, |
| நிலையான கடன் முறிகள் ... | 460, | 585, | 597, |
| வைப்புக்கள் ... | 838, | 3,444, | 6,615, |
| பெற்ற கடன்கள் ... | — | — | — |
| வரிக்குமுன் லாபம் ... | 7, | 187, | 191, |
| வரிக்குபின் லாபம் .. | 7, | 187, | 191, |
| வழங்கப்பட்ட பங்குலாபங்கள் ... | — | 25% | 30% |

*இவ்வாண்டிற்குரிய கணக்கு கணக்காய்வாளர் கையில் இருக்கின்றது.

இயக்குநர்சபை :

டாக்டர் யோகு பசுபதி M.B.B.S. (Cey), D. C. H. (Lond), M.R.C.P. (Lond). தலைவர்
A. சோமசுந்தரம்பிள்ளை, B A., F.C.A. முகாமைத்துவ இயக்குநர்
K. நடராசா, B.Sc., Bar-at-Law, Attorney-at-Law.
C. மகேசன், Attorney-at-Law
N. சிவசிதம்பரம், Retd. S.L.A.S.
K. லோகநாதன், B.S.B A. (U.S.A.)
S. மகேந்திரா, B.Sc (Cey.)
V. கார்த்திகேசு, B. Sc , A. M. B. I. M , A. M. I. Prod E.
S. தனபாலசிங்கம் B Sc.

விபரங்கட்கு தொடர்புகொள்க:

தலைமைக் காரியாலயம்
129, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24183

வழிகாட்டு அலுவலகம்
52/1, ராஜசிங்க ரோட்,
வெள்ளவத்தை.
83259


தேர்க் கொட்டகை

# கூரைமுறிந்து வீழ்ந்ததால் நால்வர் படுகாயம்!

[மட்டுவில்]

மட்டுவில் விளைவேலிமருதடி விநாயகர் ஆலயத்தின் தேர் கொட்டகையை வேயச் சென்றவர்கள் அக் கொட்டகையின் கூரை முறிந்து விழுந்ததால் பலத்த காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பினர்.

நான்கு வாலிபர்களே இவ்வாறு விபத்தில் சிக்கி பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றனர்.

சுமார் 28 அடி உயரமான இத் தேர் கொட்டகையை இவர்கள் சிரமதானம்மூலம் வேய்ந்தனர். உச்சிக்குச் சென்றதும் இதன் கூரை முறிந்து இவர்கள் நால்வரும் கீழே விழுந்தனர்.

இந்த விபத்துஏற்பட, தாம் இப் பணியைத் தொடங்கு முன்னர் மாமிச உணவைச் சாப்பிட்டு சென்றதே காரணமாக இருக்கலாமென இந்த நான்கு வாலிபர்களும் தம்மைச் சந்தித்தவர்களிடம் கூறினர். [கி]

# சி. பா. த. ஐக்கிய முன்னணி

## சமூகஜனநாயக இயக்கமானது

[புலோலி]

இதுவரைகாலமும் ‘‘சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி’’ என இயங்கிவந்த இயக்கம் ‘சமூக ஜனநாயக இயக்கம்’ என்னும் பெயரில் இயங்குவது என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. சமூக ஜனநாயக இயக்கப் பேராளர் மகாநாட்டில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. இம்மகாநாடு அல்வாயில் திரு. எம். வி நடராசா தலைமையில் நடைபெற்றது. இயக்க அமைப்பாளர் சட்டத்தரணி மு. சிவகுருநாதன் இம்மகாநாட்டில் பேசுகையில் கூறியதாவது:-

‘‘எமது நாட்டில் உள்ள தேசியக் கட்சிகளும், தமிழ் அரசியற் கட்சிகளும் தாம் விரும்புகின்றவர்களையும், தமது தலைமைக்குக் கட்டுப்பட்டவர்களையும் எமது சமூகத்தின் பிரதிநிதிகளாகத் தமது கட்சிகளில் வைத்து இருக்கின்றார்களே ஒழியப் பின்தங்கிய சமூகப் பிரதிநிதிகள் எவரைத்தானும் கட்சித் தலைமைப் பீடங்களில் அமர்த்துவது இல்லை. சாதியின் பேரால் ஏற்பட்டுவரும் கொடுமைகளை எந்த ஒரு தமிழ் அரசியற் கட்சியோ, தமிழ்த்தலைவர்களோ பகிரங்கமாகக் கண்டித்து அறிக்கைவிடக்கூட முன்வருவதில்லை எனவேதான் எமது சமூக மக்களின் தலைவிதியை நாமே நிர்ணயிக்கவேண்டிய சமூக நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது. பின்தள்ளப்பட்ட சமூகமக்கள் பல ஜீவாதாரப் பிரச்னைகளுக்கு உள்ளாகியுள்ளனர். கூலித்தொழிலைத் தவிர வேறு தொழில் வாய்ப்புகளைப்பெற முடியாதநிலை, குடியிருப்பதற்குச் சொந்த நிலமோ, வீடோ இல்லாத அவலநிலை போன்ற சமூக நெருக்கடிகள் மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

‘‘அரசாங்க பதவி நியமனங்களில்கூட எமது மக்கள் திட்டமிட்டமுறையில் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். ஆதலாலேயே இலங்கையில் இருக்கும் தமிழ்ச் சமூக அமைப்பு மாற்றி அமைக்கப்படவேண்டும் என்று நாம் கோருகின்றோம். தற்போதைய சாதி அமைப்பைக் கொண்டு சமூகத்தைப் பிரிக்கும் நிலைமாற வேண்டும். எமக்கு நாமே தலைமை தாங்க வேண்டும். எமது சமூக மக்களும் தமிழ் இனத்தவர்களே. இதனாலேயே தமிழ் மக்களிடமிருந்து பிரித்துத் தனி இனமாக எமது மக்களைப் பிரகடனப்படுத்த நாம் விரும்பவில்லை. இவ்வாறு பிரித்துப் பார்ப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்’’ என்றார். (அ)

# காரைநகரில் அஞ்சலி

[காரைநகர்]

ஆச்சாரிய விநோபாபாவேயின்மறைவு குறித்துக் காரைநகரில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

காரைநகர் சைவமகாசபை: காரை. சர்வோதயசமாசம், இலங்கை சர்வோதய சேவா சங்கம், காரை. இளைஞர் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் காரைநகர் சைவமகாசபை மண்டபத்தில் இவ்வஞ்சலி இடம்பெற்றது. [அ]

# பாலசிங்கம் விடுவிக்கப்பட்டார்

[யாழ்ப்பாணம்]

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இராணுவத்தினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த ‘தமிழன் குரல்’ ஆசிரியரான எஸ். பாலசிங்கம் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளார். பொலிஸ் கண்காணிப்பாளரின் எழுத்து மூல அனுமதியின்றி யாழ்ப்பாண குடாநாட்டை விட்டு வெளியேறக்கூடாதென இவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தையல் நிலையம்

[கரவெட்டி]

கட்டைவேலி – நெல்லியடிப் பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம் நெல்லியடியில் தையல்நிலையம் ஒன்றைத் திறந்துவைத்துள்ளது.

சங்கக் காரியாலயத்திற்கு முன்பாக நிறுவப்பட்டுள்ள இத்தையல்நிலையத்தை மகளிர் குழுத் தலைவி திருமதி புஸ்பம் சபாநாயகம் திறந்துவைத்தார்.

இத் திறப்புவிழா சங்கத் தலைவர் திரு த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

# 3 சங்கங்கள் தெரிவு

(கரவெட்டி)

கல்வி அபிவிருத்தி செய்வதற்கென யாழ் மாவட்டத்தில் 3 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் யாழ் மாவட்ட தேசிய கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

கட்டைவேலி – நெல்லியடிப் பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் காரைநகர் ப. நோ. கூ. சங்கம் ஆகிய மூன்று பலநோக்குச் கூட்டுறவுச்சங்கங்களே கல்வி அபிவிருத்திக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இச் சங்கங்கள் தமது பரப்பு எல்லைக்குள் அமைந்த கிளைகள் முதலியவற்றில் பணியாளர்கள், கூட்டுறவாளர்கள் ஆகியோரிடையே சகலதுறைகளிலும் கல்வி அபிவிருத்திச் சேவையை 1983ல் ஆரம்பிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அதிபர் நியமனம் அ. சங்கம் பாராட்டு

(புலோலி)

பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியின் நிரந்தர அதிபராக திருமதி பி. கனகசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளமைக்குக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டத்தில், நிரந்தர அதிபராக நியமிக்கப்பட்ட அதிபர் திருமதி கனகசுந்தரத்திற்குப் பாராட்டு விழாவொன்று நடத்திக் கௌரவிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

## சர்வோதய கிளை

(கரவெட்டி)

அல்வாய் தெற்கில் சர்வோதயக் கிளை ஒன்று விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை கிராம சேவை அலுவலர் திரு. செ. அ. ஞானச்சந்திரன் மேற்கொண்டு வருகிறார்.

## தெங்கு...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

"தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் போத்தலில் கள் அடைப்பது மட்டுமல்ல, பனம் சாராய வடிசாலைகளையும் அமைக்க முன்வரவேண்டும். பனஞ் சாராயத்திற்கு நல்ல கிராக்கி உண்டு. கைதடியில் உள்ள சாராய வடிசாலை போதுமானதாகஇல்லை. பனம் பொருள் அபிவிருத்திசபை திக்கம் என்னுமிடத்தில் 20 லட்சம் ரூபா செலவில் சாராயவடிசாலை ஒன்றை அமைத்து வருகிறது. இதுபோன்ற வடிசாலைகள் மற்றும் பல இடங்களிலும் அமையவேண்டும்'' என்றார்,

யாழ் கூட்டுறவு உதவிஆணையாளர் திரு ச வேலாயுதபிள்ளை தொழிற்சாலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் ''இத் தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்கு 3000 போத்தல் தொடக்கம் 5000 போத்தல் வரை கள் அடைக்கக்கூடியதாக இருக்கும். இனிமேல் கள்ளை வீணாக ஊற்றுவதென்ற நிலை ஒருபோதும் ஏற்படாது. இத்தொழிற்சாலை சிறப்பாக இயங்க சீவல் தொழிலாளர்களும் பெரிதும் உதவவேண்டும். இவ்வாறனதொழிற்சாலைகள் சண்டிருப்பாயில் வரும் ஜனவரி மாதம் இயங்க ஆரம்பிக்கும். அத்துடன் ஊரிகாவற்றுறை, கட்டைவேலி, கொடிகாமம், பருத்தித்துறை, ஆகிய இடங்களிலும் இவ்வாறன தொழிற்சாலைகள் அமைய உள்ளன என்றார்''.


வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ராதா பத்மினி
சித்தி

மனோகரா யாழ். நகர்
தினசரி 10-30, 2-15, 4-45, 7-00, 9-30
Odds and Evens
(Action and Commedy)

ராஜா யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஹலோ மிஸ்டர் ஜமீந்தார்
(கலர்)

சாந்தி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
4-வது வெற்றி வாரம்!
எம், ஜி. ஆர்-லதா
நவரத்தினம்
A.P.N. இன்வண்ணப்படம்

றீகல் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
அசோகன்-நாகேஷ்
நான் (ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா
சவாலேசமாளி

ராணி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்

வின்ஸர் தினசரி 5 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
DEMON SEED
10—13-12-82
எம்.ஜி.ஆர்-சரோஜாதேவி
நாடோடி
(கலர்)

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
BRUCE LEE in
THE WAY OF THE DRAGON
த வே ஒவ் த ட்றகன்
Your last chance to see a Karate film......
Your last chance to see a Bruce Lee's film......
கராட்டி படத்தைப் பார்க்கக் கிடைத்திருக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவே.........
புரூஸ்லீயின் வீரச் செயல்களை காணக் கிடைக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவே......


### தேசிய இளைஞர்சேவை மன்றத்தின்

# 6வதுதொழிற்பயிற்சிநிலையம் கிளிநொச்சியில் இயங்கும்!

## செய்தியாளர் மாநாட்டில் உதவி இயக்குநர் தகவல்

[நமதுநிருபர் எஸ். பாலசிங்கம்]

யாழ்ப்பாணம்)

''நாட்டுப் பற்றும், சமூக சேவையும், நல்லொழுக்கமும், பண்பாடும் அமைந்த இளைஞர் சமுதாயத்தை உருவாக்குவதே தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தின் நோக்கமாகும். இத்துறையில் இந்த சேவை மன்றம் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளது''

இவ்வாறு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாநில உதவி இயக்குநர் திரு. க. நாகேந்திரம் பத்திரிகையாளர் மகாநாட்டைத்தொடங்கி வைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

''தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலர் திரு. க. சிவானந்தமூர்த்தி தலைமையில் யாழ்ப்பாணம் ட்றிம்மர் மண்டபத்தில் நடந்த இந்தப் பத்திரிகையாளர் மகா நாட்டில் பத்திரிகை எழுத்தாளர்கள், பத்திரிகை நிருபர்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பிரதேச அலுவலர்கள், உத்தியோகத்தர்கள்ஆகியோர் கலந்துகொண்டனர். மகாநாட்டை மங்கல விளக்கேற்றி ஆரம்பித்துவைத்த உதவி இயக்குநர் திரு. க. நாகேந்திரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

### 5 தொழிற் பயிற்சி நிலையங்கள்

''இலங்கையில் தேசியஇளைஞர் சேவை மன்றத்தின் ஐந்து தொழிற்பயிற்சி நிலையங்கள் இதுவரை இயங்கி வந்துள்ளன. இதன் ஆறுவது தொழிற்பயிற்சி நிலையம் இம்மாத இறுதிக்குள் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

''தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகளையும், நோக்கங்களையும் எமது பகுதி மக்கள் புரிந்து இந்த மன்றங்களை உருவாக்கி பயன்படவேண்டும். இதற்காகவே இந்த மாநாட்டைஒரு பிரசார மேடையாக நாம்நடத்த முன்வந்தோம். இந்த மன்றங்களின் பயனையும், சேவைகளையும் மக்கள் அறிந்து பயன்படுத்தவேண்டும். எமதுபகுதிகளிலும்நல்லபயனுள்ள இளம் சமுதாயம் உருவாக்கப்படவேண்டும்.

### இளைஞர்களின் வேலைவாய்ப்பு

1970ம் ஆண்டுக்கு முன்னரே தேசிய இளைஞர்சேவைமன்றம் உருவாக்கப்பட்ட போதும், 1970ம், 71ம் ஆண்டுக்குப் பின்னரே இம்மன்றத்தின் சேவைகள் வலுவடையத் தொடங்கியது. இதன்பின்னரே நாடு முழுவதும் இந்த மன்றங்கள் பரவலாக்கப்பட்டன. இளைஞர்கள் மத்தியில் சமூகசேவை உணர்வுகளை ஏற்படுத்தவும், இவர்களது சேவைகள் மூலம் நாட்டை குறிப்பாக கிராமங்களை அபிவிருத்தியடையச்செய்வது, இப்பணிகள் மூலம் நல்ல சமுதாயத்தை உருவாக்குவதுமே இதன் நோக்கமாகும்.

''இதுமட்டுமல்ல இளைஞர்களின் வேலைவாய்ப்பு, கல்வி, கலாச்சாரம் என்பனவற்றிற்கும் இம்மன்றம் வழிவகுத்து செயற்படுகிறது.

''நல்லவழியில் இளைஞர்களை வழிநடத்தி, நல்ல வாழ்வையும், பொருளாதாரவளத்தையும் கொடுக்கும்வழிகாட்டியாகவே இம் மன்றங்கள் இயங்குகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல பாரிய வேலைத்திட்டங்களை எமது மன்ற இளைஞர்கள் செய்துள்ளனர் பல கிராமங்களை புனரமைப்புச் செய்துள்ளனர் மகாதேவா தாம்போதி பாலவேலையில் ஒரு பகுதி வேலைகளை தேசிய இளைஞர்மன்றங்களே செய்துள்ளன வீதிகள், குளங்கள் என்பன பல இவர்களால் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் இவர்கள் பயிற்சி பெற்றது மட்டுமல்ல வேதனமும் பெற்றுள்ளனர். இளைஞர்களின் வாழ்வுக்குத் தேவையான சகல நற்கருமங்களையும் இம்மன்றம் செய்து வருகிறது.

### கூட்டுறவு நிறுவனம்

''இம்மன்றங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கென 'நிஸ்கோ' என்ற பெயரில் ஒரு கூட்டுறவு நிறுவனமும் இயங்கத்தொடங்கியுள்ளது இளைஞர்களுக்குச் சேமிப்புச் செய்வதற்கும், கடன் பெறுவதற்கும் இந்தக் கூட்டுறவு நிறுவனம் உதவி புரிகிறது. சேமிப்புக்கு 18 வீத வட்டிகொடுக்கிறது. இதுவரை யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 600 இளைஞர்கள் இந்த ''நிஸ்கோ'' ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கின்றனர்'' என்றார்.

இளைஞர் சேவை மன்ற யாழ்ப்பாண மாவட்ட அலுவலர் திரு. க.சிவானந்தமூர்த்தி உரையாற்றுகையில் கூறியதாவது:-

### ரூ 5 லட்சம் ஒதுக்கீடு

1983 ம் ஆண்டுக்கான யாழ். மாவட்ட இளைஞர் சேவைக்கு ஐந்து லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதைவிட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின்கீழ் சில வேலைத்திட்டங்களுக்கு நிதி மேலதிகமாகக் கிடைக்கும்.

''இம்மன்றங்கள் பெண்களுக்கான நடமாடும் பயிற்சி நிலையங்களையும் நடத்தி வருகிறது. இவற்றில் பயிற்சி பெறுபவர்களுக்குச் சான்றிதழ்கள் மட்டும் வழங்கப்படுவதில்லை இவர்களுக்கான வேலைவாய்ப்பையும் ஏற்படுத்த இளைஞர் மன்றம் ஏற்பாடுகள் செய்து வருகிறது.

''கிளிநொச்சியில் ஆரம்பிக்கும் தொழிற் பயிற்சி நிலையத்தில் முதலில் விவசாயப்பயிற்சியே ஆரம்பிக்கப்படும். இதைத்தொடர்ந்து தச்சுவேலைப் பயிற்சி, மேசன் பயிற்சி, இயந்திரப் பயிற்சி, தொழில் நுட்பப் பயிற்சி தையல் பயிற்சி, கைவேலைப் பயிற்சி என்பன படிப்படியாக இயங்கவுள்ளன. தற்பொழுதுள்ள நடமாடும் பயிற்சி நிலையங்களிலும் இவை அடங்குகின்றன. வெளிநாட்டு நிதியுதவியுடனேயே இம் மன்றம் பல்வேறு வேலைத் திட்டங்களைச் செயல்படுத்திவருகிறது. இதை யாழ்ப்பாண மாவட்ட இளைஞர்களும் நல்லமுறையில் பயன்படுத்தி எமது பகுதி முன்னேற்றங்களை காணமுயல்வதுடன் நல்ல இளம் சமுதாயம் உருவாகவும் வழிவகுக்கவேண்டும.

'இரண்டு லட்சம் ரூபா எமது மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. வருடந்தோறும் இத்திட்டத்தின்கீழ் மூன்று விழாக்களை எமது மன்றங்கள் எடுத்துவருகின்றன. இளைஞர் விழா, இளைஞர்தினம், தைப்பொங்கல் விழா என்ற மூன்றும் இளைஞர்களது முக்கிய விழாவாகும். தமிழ்ப்பகுதி இளைஞர்களுக்கெனத் தனியான கலை கலாச்சாரக் குழுக்களும் இயங்கிவருகின்றன. 1983ல் இது தொடர்பான கருத்தரங்குகள் பதினைந்து பகுதிகளில் நடத்தப்படவுள்ளன. இதுவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் 60 இளைஞர் மன்றங்கள் இயங்குகின்றன. 1983ல் மேலும 30 மன்றங்கள் அதிகரிக்கப்படவுள்ளன' என்றார்.

## இன்றைய பலன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மகரம்: இதயத்தில்இனிமையான எண்ணங்கள் தவழும், கடந்தகால சம்பவம் ஒன்று எதிர்கால முன்னேற்றத்துக்கு வழி அமைக்கும். வேண்டிய ஒருவரின் உதவி உற்சாகமான சூழ்நிலையை உருவாக்கும்.

கும்பம்: வாழ்க்கை புதிர் நிறைந்ததாகவே இருக்கும். எதிர் பார்த்த முடிவில் ஏமாற்றம் தென்படும. உடன்பிறந்தவர்களாலேயே தொல்லைகள் உருவாகும். பொறுமை விரும்பத்தக்கது.

மீனம்: குடும்ப வாழ்க்கை குதூகலம் நிரம்பியதாக இருக்கும். காதலர்களாயின் இத்தினம் கற்கண்டுபோல் இனிக்கும். பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவதற்கு இடமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## இன்று மெமோரியலில் பாரதி விழா

மானிப்பாய்)

மானிப்பாய் மெம்மோறிய ஆங்கிலப் பாடசாலை க. பொ. த. உயர்தர மாணவர் ஒன்றியம் இன்று பிற்பகல் பாரதி நூற்றாண்டைக் கொண்டாடுகிறது. மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் பிரதமஅதிதியாகக் கலந்துகொள்ளும் இவ் விழாவில் திருவாளர்கள் சு. கு. சண்முகநாதன், ஜெயக்குமார், குமரன், தம்பாப்பிள்ளை ஆகியோர் நடாத்தும் சிறப்பு நிகழ்ச்சியான இலக்கிய ஆணைக்குழுமுன், 'பாரதி வழி நின்று பாடிய பெருமை சேர வேண்டியது யாருக்கு' என்ற தலைப்பில் இலக்கிய விசாரணை மன்றம் நடைபெறவுள்ளது. சகோதரப்பாடசாலைகளான மானிப்பாய் மகளிர் கல்லூரியும், மானிப்பாய் இந்துக்கல்லூரியும் இவ் விழாவில் பங்கெடுக்கின்றன.

## ஸ்கந்தாவில் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

மதகுருமார்களையும், விரிவுரையாளர் நித்தியானந்தன் தம்பதிகளையும், இளைஞர்களையும் விடுதலைசெய்யுமாறுகோரி சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவர்களும் மாணவிகளும் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் கல்லூரி மைதானத்தில் உண்ணாவிரதமிருந்தனர்.

''மதகுருமார்களை விடுதலை செய் அன்று இளைஞர்கள் இன்று மதகுருமாரும், பெண்களும நாளை யாரோ'', ''சத்தியத்தின் காவலர்கள் வேதனையின் மத்தியில் இராணுவ முகாமில்'' போன்ற சுலோக அட்டைகள் உண்ணாவிரதத்தின்போது வைக்கப்பட்டிருந்தது.

ஆயிரக்கணக்கான வர்கள் கறுப்புப்பட்டியணிந்து இவ் உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டனர்.

# சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

நேற்று முன்தினம் தேசிய லொத்தர் சபை தலைமையகத்தில் இழுக்கப்பட்ட 911-வது இலங்கை சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு
**19 E 0586**
ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு
**18 O 0040**
ரூபா 40,000

மூன்றாவது பரிசு
**18 Z 0742**
ரூபா 10,000

தலா ரூ. 795. 54சதம் ஆறுதல் பரிசு பெறும் நூறுடிக் கட்டுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 06 A 0475 | 07 A 0758 |
| 07 A 0821 | 11 A 0584 |
| 09 B 0273 | 22 B 0278 |
| 25 B 0808. | 03 C 0649 |
| 07 C 0310 | 18 C 0462 |
| 20 C 0821 | 24 C 0725 |
| 01 D 0521 | 04 D 0603 |
| 14 D 0233 | 01 E 0114 |
| 03 E 0563 | 10 E 0446 |
| 23 E 0040 | 25 F 0079 |
| 26 F 0460 | 03 G 0169 |
| 03 G 0540 | 11 G 0996 |
| 26 G 0781 | 02 H 0847 |

| | |
|---|---|
| 12 H 0923 | 16 H 0154 |
| 17 H 0807 | 09 J 0866 |
| 12 J 0840 | 18 J 0267 |
| 24 J 0121 | 06 K 0705 |
| 10 K 0897 | 11 K 0050 |
| 11 K 0461 | 13 K 0388 |
| 25 K 0307 | 26 K 0990 |
| 12 L 0561 | 02 M 0067 |
| 02 M 0661 | 03 M 0551 |
| 07 M 0398 | |
| 13 M 0130 | 22 M 0470 |
| 05 N 0486 | 02 O 0050 |
| 11 O 0375 | 16 O 0510 |
| 02 Q 0150 | 02 Q 0347 |
| 08 Q 0137 | 16 Q 0521 |
| 20 Q 0339 | 04 R 0194 |
| 07 R 0146 | 17 R 0551 |
| 18 R 0972 | 22 R 0535 |
| 26 R 0140 | 26 R 0673 |
| 01 S 0038 | 03 S 0486 |
| 22 S 0661 | 02 T 0754 |
| 20 T 0619 | 05 U 0305 |
| 10 U 0533 | 15 U 0399 |
| 19 U 0243 | 20 U 0973 |
| 23 U 0767 | 25 U 0152 |
| 01 V 0407 | 02 V 0101 |
| 09 V 0193 | 12 V 0003 |
| 13 V 0592 | 18 V 0610 |
| 19 V 0568 | 24 V 0326 |
| 25 V 0447 | 01 W 0372 |
| 12 W 0714 | 17 W 0835 |
| 05 X 0587 | 15 X 0266 |
| 02 Y 0450 | 18 Y 0288 |
| 22 Y 0177 | 24 Y 0098 |
| 24 Y 0839 | 02 Z 0139 |
| 06 Z 0531 | 09 Z 0786 |
| 16 Z 0273 | 22 Z 0021 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.]

## கோண்டாவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெட்டியும் உடைக்கப்பட்டிருந்தன.

ஸ்தலத்தில் மரண விசாரணை நடத்திய பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் பிரேத பரிசோதனைக்குத் தரவிட்டு தீர்ப்பு வழங்குவதை நாளை வியாழக்கிழமைவரை ஒத்திவைத்தார்.

அலுமாரிக்குள் காணப்பட்ட சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும், அடகு வைத்திருந்த பதிவுக்கொப்பியையும் சுன்னுகம் பொலிசில் பாரம்கொடுத்ததுடன் அவற்றை யாழ். நீதிமன்றத்தில் ஒப்படைக்கும்படியும் பணித்தார்.

கொலைசெய்யப்பட்ட தம்பதிகள் சுமார் 25 வருடகாலமாக அடகுபிடிப்பதில் ஈடுபட்டுவந்தார்கள் என்றும், பல லட்சக்கணக்கான நகைகள் கொள்ளை அடிக்கப்பட்டிருக்கலாம் எனவும், அயல்வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இச்சம்பவம் சுமார் அதிகாலை ஒருமணியளவில் நடைபெற்றபோது அவலக்குரல்கேட்டு அயலிலுள்ள வீட்டுக்காரர் எழுந்து மின்சாரவெளிச்சம் போட்டுப்பார்த்தபோது, வெடியோசை எழுப்பப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இந்த வெடிச்சத்தம் இருமுறை கேட்டதாகவும் பீதியடைந்து சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு தாங்கள் செல்ல முடியவில்லை, என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது. பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர். [மா]

## "கலை இலக்கிய முன்னோடி"

(யாழ்ப்பாணம்)

"தமிழ் இலக்கியத்துறையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவரும், பாட்டாளி வர்க்க கலை இலக்கியத்தின் முன்னோடியும், சமூகவியல் நோக்குள்ள சிறந்தகல்வியாளரும், மனிதகுலத்தை நேசித்து அதன் முன்னேற்றத்தை எதிர்நோக்கி வாழ்ந்த சர்வதேசவாதியும், தேசிய இனங்களிடையே ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் விரும்பி சுதந்திரமும் சமத்துவமும் நிறைந்த சபீட்சஇலங்கையை காணவிரும்பிய தேச பக்தருமான பேராசிரியர் க. கைலாசபதி மறைவு நாட்டுக்கும் மக்களுக்கும் பேரிழப்பாகும்" என்று தேசிய கலை இலக்கியப் பேரவை விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று நடக்கும் புதிய கட்டடத் திறப்புவிழா

(மன்னார்)

மன்னார் புனித சேவியர் மகளிர் மகாவித்தியாலயத்தில் புதிய கட்டட திறப்புவிழா இன்று காலை நடைபெறவிருக்கிறது. கண்காட்சியும் இத்தோடு இடம்பெறும். மன்னார் எம். பி திரு. பி.எஸ் சூசைதாசன் திறந்துவைப்பார். நாளை மாலைஆங்கிலதினம்கொண்டாடப்படும். மன்னார் கல்விப் பணிப்பாளர் செல்வி பி. ஆறுமுகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## கார்விபத்து...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வீதியில் நேற்று பகல் நின்றபொழுது, விபத்துக்குள்ளானதாகவும், பின்னர் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோழுது அங்கு மரணமானார் என்றும், விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை நடாத்திய பதில் நீதவான் எஸ். எஸ். பிரான்சிஸ், கார்சாரதி அம்பலவாணர் வசந்தன் என்பவரை இம்மாதம் 10ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார்.

யாழ். சட்டவைத்திய அதிகாரி எஸ். சுப்பிரமணியம் பிரேத பரிசோதனை நடத்தினார். (மா)

## தமிழறிஞர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராக கடமையேற்று, வளாகத்தைவளர்த்தெடுத்த தனிப்பெரும் மதிப்புடையவராகும்.

தனதுசுற்றத்தாரோடுமட்டுமன்றி, சகல சமய சாகியத்தாருடனும் வாழ்ந்து இன்று தமிழறிஞர் வரிசையிலே ஓர் அகன்ற இடைவெளியை விட்டுச்சென்றுள்ளார்.

அவர் மறைவு, அவருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்புக் கிடைத்த எமக்கு ஆழ்ந்த வேதனையைத்தருகிறது' என்று திரு. யு. பி. விஜயக்கோன் தமது அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

## யாழ். பொதுசன நூல்நிலையத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூல்நிலையக்கட்டிடத்தில் இம்மாதம் 0ம் திகதி மாலை மீளவித்துப் புதுப்பிக்கப்பட்டுள்ள யாழ். பொதுசன நூல்நிலையத்தின் வடபாகத்தை மாநகர முதல்வர் திரு. ராஜாவிசுவநாதன் திறந்துவைக்கவுள்ளார். [வெ]

## அவள் அரசில்..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறக்கும் பொழுதே பாவமாகின்ற இறைவல்லமையால் கருவாகி உருவானாள். கன்னிமை அழியாமலே தாயாகி புதுமையுற்றுள். பின்னர் இறப்பிலும் இயற்கையை மரணத்தை வெற்றிக்கொள்ள வைத்து ஆன்மசரீரத்தோடு விண்ணகம் எடுக்கப்பட்டு விண்ணுக்கும் மண்ணுக்கும் அரசியாக்கப்பட்டுமுடிசூட்டப்பட்டாள் சிலுவையிலே கிறிஸ்துவினுல் மானிடம் முழுவதினதும் தாயாக்கப்பட்டாள். இன்று இவ் அருள் பொழி அன்னையின் மாசில்லாமல் உற்பவித்த பெருவிழாவைக் கிறிஸ்தவர்கள் திருவிழாவாக்காண்கின்றனர். கிறிஸ்தவர்கள் யாழ். மண்ணைபொறுத்தவரை இவ்விழா பேராலயத்தின் திருவிழாவாகவும் இரட்டிப்புச்சுவை கூட்டுகிறது. ஆம் பேராலயம் புனிதமரியாளின் திருப்பெயரையே தாங்கிநிற்கிறது. முன்பு இவ்வாலயம் கொஞ்சேஞ்சி மாதா கோவில் எனபோர்த்துகேயரால் அழைக்கப்பட்டது. கொஞ்சேஞ்சி என்ருல் மாசில்லாமல உற்பவித்தவன் எனத்தமிழ்ப்படும். புனித மரியாள் பேராலயம் கட்டிமுடிக்கப்பட்டதன் பின் வரும் 1வது திருவிழாவாகும் இன்று அமைகிறது. விண்ணரசி என்றமுறையில் எம்மை ஆண்டு அவள் அரசில்சேர்த்திட வரம் கேட்போம்.

## இலக்கிய...

[1- ம் பக்கத்தொடர்ச்சி]

பதவியை ஏற்று, யாழ். மாணவர்களை முதன்மைநிலைக்கு உயர்த்திஞர். பத்திரிகைத் துறையில் அவர் பணியாற்றிய காலத்தில் புதிய சிந்தனைகளையும். தெளிந்த பார்வையும், ஆசிரிய தலையங்கத்தில் திட்டி விழிப்பை ஏற்படுத்தியவர். அன்ஞரது மறைவு, தமிழ் இலக்கியத்துறைக்கு மட்டுமல்ல முழுத்தமிழினத்துக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்" என்றும அவர் தெரிவித்துள்ளார்.

## வாசிப்பதையே...

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

பேராசிரியர் க. கைலாசபதியின் மறைவுகுறித்து பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"வாசிப்பதையே தமது தொழிலாகக்கொண்ட கைலாசபதி, எடுத்தமுயற்சிகளின் பயனுக அவரதுபுகழ் தமிழகம் முழுவதுமே பரவியிருப்பதை அறிந்து பெரிதும் மகிழ்ந்தேன். நாவலர் ஆராய்ச்சியாளரும், விமர்சகருமான பேராசிரியர் கைலாசபதி கல்விமான்கள் வரிசையில் வைத்துப் பாராட்டப்படக்கூடிய ஒருவர் என்பதில் ஐயமில்லை" என்றும் பண்டிதமணி குறிப்பிட்டுள்ளார்.

## சந்தேக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரெழில் அமைச்சர் திரு. பெஸ்றஸ் பெரேரா ஆகியோர் சமூகமளித்திருந்தனர்

வடக்கிலுள்ள சில கத்தோலிக்க மதகுருமார் நடவடிக்கைகள் சம்பந்தமாகவும், நாட்டின் மற்றப்பகுதிகளிலுள்ள சில பிரிவு குருமார்களின் அரசியல் நடவடிக்கைகள் பற்றியும் இச்சந்திப்பின்போது ஆராயப்பட்டது.

கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: "வன்செயல் எந்த ரூபத்தில் வந்தாலும், எங்கிருந்து வந்தாலும், அதனை கண்டிக்கிறோம். சட்டம் அதற்குரிய வழியை எடுக்கவேண்டும். நீதியான நேர்மையான விசாரணையின்பின் எந்த நபராவது குற்றவாளியாகக்காணப்படின், அவர் சட்டத்தை மீறியதற்கான தண்டனையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சந்தேகநபர்களுக்கு எதிராக ஒரு நீதியான நேர்மையான விசாரணை நடைபெறவேண்டுமென வலியுறுத்துகின்றோம். ஆனல் மதகுருமார் விஷயத்தில் தாங்கள் எந்தவிசேட சலுகைகளையும் கேட்கவில்லை

"பயங்கரவாத நடவடிக்கைகளில் திருச்சபைக்கு எவ்வித தொடர்பும் இல்லைஎன்று பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ள கருத்தை வரவேற்கும், அதேநேரத்தில் பயங்கரவாத நடவடிக்கைக்கும் எமக்கும் எவ்விததொடர்பும்இல்லை என்பதையும் திட்டவட்டமாக தெரிவிக்கின்றோம்.

"கட்சி அரசியல் தொடர்பாக, திருச்சபையின் தலைமை மிகத்தெளிவாகஉள்ளது கட்சி அரசியலில் திருச்சபைக்கு தொடர்பில்லை."

சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பாக மதகுருமார் பெயரில் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்திற்கும் திருச்சபைக்கும் எவ்விததொடர்புமில்லை என்றும அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. [இ]


## காணவில்லை

செ. சரவணமுத்து

பன்னுலை, தெல்லிப்பழை செல்லையா சரவணமுத்து சித்தசுவாதீனமற்ற நிலையில் 6-ம் தேதி தொடக்கம் காணவில்லை. வெள்ளைவேட்டி, 'T'சேட், சால்வை அணிந்திருந்தார். அவர் 5' 3'' உயரமும், கருமை நிறமும், தலைமயிர் கட்டையாக வெட்டியும், நடுத்தலை வழுக்கையும், 76 வயதினருமாவார். எந்நேரமும் பல்லை ஆராத்தியபடியேயிருப்பார். அவரது பிறப்பு நாவற்குழி. அவரைக் கண்டால் கீழ்க்காணும் விலாசத்துக்கு தகவல் கொடுக்கவும். சன்மானம் வழங்கப்படும.

சுப்பிரமணியசுவாமி
விஞயகமூர்த்தி
"புதுவீடு" பன்னுலை, தெல்லிப்பழை.

5408



## மரண அறிவித்தல்

### நல்லதம்பி கந்தையா

லிகிதர் நல்லதம்பி கந்தையா காலமானார். இவர், ஆனந்தா அச்சகத்தின் முன்னுள் லிகிதரும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மதிவதனசோதி, திருஅருட்சோதி, திருமதி திருச்சிற்றம்பலம் நிமலசோதி, பேரின்பசோதி (தாதி, யாழ் அரசினர் வைத்தியசாலை), குலசோதி, மகேந்திரசோதி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு க திருச்சிற்றம்பலம் (வர்த்தகர் - தட்டா தெருச் சந்தி), திருமதி திருஅருட்சோதி கமலராணி ஆகியோரின் அன்பு மாமனுரும், ரேகன், பிரசன்னு, ஹரிகரன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று (8-12-1982 ல்) புதன்கிழமை காலை 8-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகட்காக அன்னரது மடம் வீதி, திருநெல்வேலி இல்லத்திலிருந்து திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:- K. திருச்சிற்றம்பலம்

5409



## மரண அறிவித்தல்

### சின்னத்துரை ஐயர் திருநாவுக்கரசு ஐயர்

குரும்பசிட்டி அம்பாள் ஆலய பூசகர் சின்னத்துரைஐயர் திருநாவுக்கரசுஐயர் அவர்கள் 7-12-1982 (செவ்வாய்) அன்று சிவபதமெய்திஞர். அன்னர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவத்திரு மாணிக்கவாசகக் குருக்கள், சிவத்திரு இரத்தினசாமி ஐயர், புஷ்பலோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி மா இராசலட்சுமி, திருமதி இ தியாகேஸ்வரி ஆகியோரின் மாமனுரும், காலஞ்சென்ற சி. சுப்பிரமணியஐயர், திரு. சி சிவானந்தஐயர் (அதிபர், நடராஜ இராமலிங்க மகாவித்தியாலயம், ஆவரங்கால்), காலஞ்சென்ற பா. இராஜேஸ்வரி, காலஞ்சென்ற ச. கண்ணம்மா ஆகியோரின் சகோதரருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை (8-12-82) பிற்பகல் 2 மணிக்கு குரும்பசிட்டியில் நடைபெறும்.

5410


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.